தென் இந்தியா க்ஷேத்ரங்கள்

பி. வி. ஜகதீச அய்யர் இயற்றியது.

7

ராமேசுவரம்.

உத்தரகோசமங்கை.

திருப்புல்லாணி.

Copyright Registered.

தமிழ் புத்தகங்கள்.

	ரூ.	அ.	ப.
தேன் இந்தியா க்ஷேத்திரங்கள்:			
1. ஸ்ரீரங்கம் ...	0	10	0
2. சிதம்பரம் ...	1	0	0
3. திருவானைக்காவல், திருச்சிறாப்பள்ளி, உய்யக்கொண்டான் திருமலை	0	10	0
4. கரூர், நெரூர், கங்கைகொண்ட சோழபுரம், அன்பில் ...	0	10	0
5 & 6. மதுரை ...	1	8	0
7. ராமேசுவரம், உத்தரகோசமங்கை, திருப்புல்லாணி ...	0	10	0
திருவானைக்காபுராணம் ...	2	0	0
கம்பராமாயணம்: சுந்தரகாண்டம் ...	1	8	0
ஸ்ரீ சங்கரபகவத்பாதர் சரித்திரம் ...	1	0	0
ஸ்ரீசிருங்ககிரி ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதானந்தசிவாபிநவநரஸிம்ஹபாரதீஸ்வாமிகள் திவ்யசரித்திரம் ...	3	0	0
ஸ்ரீமத்பகவத்கீதாரஹஸ்யம் பாலகங்காதரதிலகர் இயற்றியது முதற்பாகம் ...	1	4	0
பகவத்கீதை வெண்பா ஷட்கம்—1 ...	0	6	0
ஷட்கம்—2 ...	0	6	0
ஷட்கம்—3 ...	0	6	0
தேவீ கீர்த்தனைகள் ...	0	2	0
ஸத்குருஸ்துதி ...	0	2	0
ஹரிஸ்துதி ...	0	2	0
ஸுப்ரமண்யஸ்வாமி ஸ்தோத்ரங்கள்	0	5	0
முருகன் கீர்த்தனைகள் ...	0	2	0
சிருங்கேரி ஸ்வாமிகள் கொடுமுடியில் செய்த உபன்யாஸம் ...	0	2	0
சுண்ணாம்பு, சாந்து, சிமெண்டு, காங்கிரீட் தளவரிசை இவைகளைப்பற்றிய நூல் ...	0	4	0
சித்தரதான் ...	0	2	0
காங்கிரஸ் மஹாஸபை ...	0	4	0
தேவபோகம் ...	1	0	0
நாற்பது லக்ஷம் ரூபாய் ...	0	3	0
தாதாவின் தந்திரம் ...	0	2	0
ஓர் இரவின் ஸம்பவங்கள் ...	0	6	0
ஹேமந்தகுமாரி ...	0	2	0
ஹென்றி பெஸ்டலேஸி ...	0	2	0
ஹிரண்மயி ...	0	2	0
கிருஸ்துபோன்ற ஒழுக்கமுறைநூல்	1	0	0
இந்தியாவும் சுய ஆட்சியும் ...	1	8	0
இந்திரா ...	0	2	0
கொடியாலம் வாசுதேவ அய்யங்கார்	0	2	0
காவடிச்சிந்து ...	0	2	0
லஜ்ஜாவதி ..	0	2	0

	ரூ.	அ.	ப.
மாலதீ ...	0	3	0
பெருமுடிச்சோழன் ...	0	6	0
ஸதாசிவேந்திர ஸரஸ்வதி ...	0	2	0
அன்பின் வலிமை ...	0	10	0
பிருதுலை ...	0	8	0
இராதாராணி ...	0	2	0
ஸத்குரு கீதை ...	0	8	0
வீரமாதேவன் ...	0	4	0
வித்யாரண்ய நகரம் ...	0	8	0
வியாபாரநீதி ...	0	8	0
ஸ்ரீ வாணீ விலாஸினி தனிச்சஞ்சிகை	0	8	0
,, இரட்டைச் சஞ்சிகை 1க்கு	1	0	0
,, 6 நம்பர்கள் அடங்கிய பயிண்டு செய்த வால்யம் ஒன்றுக்கு ...	3	4	0
குணசீல ஸ்தலபுராணம் ...	0	8	0
ஹனுமான்சிங் ...	0	12	0
சர்கா ...	0	8	0
சுந்தரி ...	1	0	0
திருமுருகாற்றுப்படை ...	0	12	0
பத்மினி ...	0	3	0
ரகுநாதன் ...	0	12	0
குணசில திருத்தேர் திருப்பணி அகவல் ...	0	2	0
விவேகசந்திரிகை ...	0	8	0
வஸந்தஸமுத்ரம் ...	0	12	0
ஜினேந்திரன் ...	1	8	0
பொன்னுசாமித் தேவர் கொலை ...	0	14	0
ஸ்ரீ வாமன சரித்திரம் ..	0	2	0
மூன்று வைரங்கள் ...	0	6	0
தாக்ஷாயிணி ...	0	6	0
கலாசுந்தரி ...	0	12	0
மதுசூதனன் ..	0	8	0
சிவகுமாரன் ...	1	0	0
நற்குலதெய்வம் ...	0	8	0
மதனமனோஹரி ...	0	8	0
நவநீதரம்பை ...	1	0	0
கோமளவல்லி ...	0	8	0
காமேந்திரன் ஞானலோசனி ...	1	0	0
கஜபதி ...	3	10	0
தியராழன்கதை ...	0	12	0
பூர்ன வல்லிகதை ...	0	6	0
கோமளம் காஞ்சியாத்திரை ...	0	8	0
சாரசநேத்ரி ...	0	12	0
காட்டுராஜன் ...	0	3	0
திலோத்தமா ...	0	8	0
மாதவி ...	0	10	0

B.S



ராமநாதஸ்வாமி கோயில் விமானம்.



ராமேசுவரம் கோயிலில் மூன்றாவது பிராகாரமாகிய சொக்கட்டான் மண்டபம்.

ராமேசுவரம்.

ராமேசுவர மென்பது நமது இந்தியாவின் ஆக்னேய பாகத்தில் வங்காளக் குடக்கடலிலுள்ள ஒரு தீவு. இந்தியாவுக்கும் அத்தீவுக்கும் இடையில் நான்குமைலகலம் ஸமுத்திரமுளது. இந்த இடையிலுள்ள ஸமுத்திரத்திற்கு பாம்பன் கால்வாய் என்று பெயர். சென்னப்பட்டணமிருந்து ரயில் மார்க்கமாக இத்தீவு சுமார் 450மைல் தூரமுள்ளது. பாம்பன் கால்வாய்க்குப் பாலம் போடப்பட்டு ரெயிலானது இப்பொழுது நேராக ராமேசுவரத்துக்குச்சென்று அத்தீவின் தெற்குக் கடைசியிலுள்ள தனுஷ்கோடி வரையில் போகிறது.

இந்த ராமேசுவரமானது பரதகண்டம் முழுமையிலும் பிரஸித்திபெற்ற க்ஷேத்ரம். எல்லா வர்ணத்தார்களும் எல்லா மதஸ்தர்களும் இந்த க்ஷேத்ரத்தை மிகவும் விசேஷமானதாகக் கொண்டாடுகிறார்கள். இங்குவரும் யாத்திரைக்காரர்களுக்கு ஓர் கணக்கில்லை. எப்பொழுதும் இந்தியாவிலுள்ள பற்பல விடங்களினின்றும் ஜனங்களை இங்கு காணலாம். பிரதிதினமும் இங்குள்ள ஈசுவரனாகிய ஸ்ரீ ராமனாதருக்கு காசியிலிருந்து யாத்தி

ரைக்காரர்களால் கொண்டுவரப்பட்ட கங்கையானது அபிஷேகமாகிறதென்றால் நமது தேசத்திலுள்ள ஜனங்களுக்கு இந்த க்ஷேத்ரத்தினிடத்துள்ள பக்திக்கும் சிரத்தைக்கும் அளவு கூறுவது ஸத்தியமாகுமோ? இங்குள்ள ஈசுவரனாகிய ஸ்ரீ ராமநாதாது லிங்கமானது புண்ய பூமியாகிய நமது பாதகண்டத்திலுள்ள பன்னிரண்டு ஜ்யோதிர் லிங்கங்களுள் ஒன்று. நமது தென்இந்தியாவில் இந்த ஒரு ஜ்யோதிர் லிங்கம் தான் உள்ளது. நமது ஆதி ஆசார்யர்களான ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசார்யாவர்கள் இந்த லிங்கத்தைக் குறித்துப் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்கள்.

श्रीताम्रपर्णीजलराशियोगे निबद्ध्य सेतुं निशि बिल्वपत्रैः ।
श्रीरामचन्द्रेण समर्चितं तं रामेश्वराख्यं सततं नमामि ॥



அசோகவனத்தில் ஸீதை ராக்ஷஸிகளின் காவலில் இருத்தல்.

அவர்களால் அத்வைதமதத்தைப் பரவச்செய்வதற்காக பரதகண்டத்தின் நான்கு திக்குகளிலும் ஸ்தாபிக்கப்பட்ட நான்கு மடங்களுள் முககியமானதும் தக்ஷிணாம்நாயம் என்று சொல்லப்படுவதுமான ஸ்ரீ சிருங்ககிரி மடத்துக்கு இந்த ராமேசுவரத்தையே தீர்த்தமாக ஏற்படுத்தியிருக்கிறார்களென்றால அதன் மஹிமையை சொல்லவும் வேண்டுமோ. அதனால் தான் சிருங்ககிரி மடாதிபதிகள் ஒவ்வொருவரும் தாஙகள் விஜய யாத்திரையாகப் புறப்படும பொழுது இந்த க்ஷேத்ரத்துக்கு தவராமல் வந்து செல்கிறார்கள். க்ஷேத்ரத்தாலும் மூர்த்தியாலும், தீர்த்தத்தாலும் மிகவும சிறப்புற்று விளங்கும் இநத ராமேசுவரமானது கநதமாதன பர்வதத்தின் சிகரத்தில் ஸ்ரீ ராமபத்ரனால் லங்கைக்குச் செல்வதற்காக ஏற்படுத்தப்பட்ட ஸேது என்று சொல்லப்படும் அணையின் ஆரம்பத்தில் இருக்கிறது.

ஸேது ஏற்பட்ட காரணம்.

அதர்மத்தைப் போக்குவதற்காகவும் தர்மத்தை நிலை நிறுத்துவதற்காகவும் பிரதியுகமும் தாம் அவதாரம் செய்வதாக வாக்களித்த பகவான் திரேதாயுகத்தில் ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்தியாக தசரதமஹாராஜாவிடம் அவதரித்து பிதுர்வாக்ய பரிபாலனமே முக்யதர்ம

மெனக்கொண்டு தனக்கு யௌவராஜ்ய பட்டாபிஷேகத்துக்கு எல்லாம் தயாராயிருந்த ஸமயத்தில் பதினான்குவருஷம் காட்டுக்குச்சென்று அங்கு வஸிக்கவேண்டுமென்று தசரதர் சொன்ன வார்த்தையைக்கேட்டு உடனே தனது தம்பியாகிய லக்ஷ்மணனுடனும் பத்னியாகிய ஸீதாதேவியுடனும் காட்டுக்குச்சென்றனர். அங்கு தண்டகாரண்யத்தில் ஸஞ்சரிக்கும் காலத்தில் லங்கைக்கு அதிபதியாகிய தசகண்டனாகிய ராவணனானவன் ஸீதையினழகைக்கண்டு அவள்மேல் மோஹங்கொண்டு அவள் தனிமையாக இருந்த ஸமயத்தில் கபடமாக ஸந்யாஸிவேஷம் தரித்துக்கொண்டு அவளிடம் நெருங்கி அவளை அபஹரித்துக்கொண்டு லங்கைக்குச்சென்று அங்கு அசோகவனத்தில் அவளை ராக்ஷஸிகளின் காவலில் வைத்துவிட்டான். உடனே ஸ்ரீ ராமரும் லக்ஷ்மணனும் ஸீதையைத் தேடிக்கொண்டு பலவிடங்களுக்குச் சென்று வானரங்களுக்கு அரசனாகிய ஸுக்ரீவனுடன் ஸ்நேகம் செய்துகொண்டு அவனுடைய வானரஸைந்யங்களை நாலாபக்கங்களிலும்சென்று ஸீதை இருக்குமிடம் தேடிவரும்படி ஆக்ஞாபித்தார். அவ்வாறு சென்ற வானரங்களுள் முக்கியான ஹநுமார் தெற்குதிக்கை நோக்கிச் சென்று ஸமுத்திரத்தைத்தாவி லங்கையையடைந்து அங்கு அசோகவநத்தில் ஸீதாதேவியைக்கண்டு அவள் ராவணனின் நிர்ப்பந்தம் பொறுக்கமாட்டாமல் தற்கொலை செய்துகொள்ளப் பிரயத்தனப்பட்டவளைத் தடுத்து ஆசுவாஸப்படுத்தி ஸ்ரீராமனின் கணையாழி மோதிரத்தை அவளுக்கு அடையாளமாகக்காட்டி சீக்கிரத்தில் ஸ்ரீராமரையும் லக்ஷ்மணனையும் கூட்டிவந்து அவளை அங்கிருந்து அழைத்துப்போவதாக அவளுக்குத் தேர்தல் சொல்லி பிறகு அசோகவனத்தை அழித்து அதனால் ராவணனிடம் கொண்டுவரப்பட்டு அங்கு அவனுக்கு ஸமானமாக இருக்கவேண்டி அவனுடைய ஸிம்ஹாஸனத்தின் உயரத்திற்கு அதிகமாகவே தனது வாலை ஆஸனமாக சுருட்டி அதன்மேல் உட்கார்ந்துகொண்டு அவனுக்குப் பலவாற்றாலும் புத்திமதிகள் சொல்லியும் அவன் காமக்குரோதாதிகளால் புத்தி கெட்டவனாய் இவர் வார்த்தைகளைக்கேளாமல் இவரைக்கொல்லும்படி கட்டளையிட்டான். உடனே அவனுடைய தம்பியாகிய விபீஷணன் தர்மசிந்தையுள்ளவனாதலால் தூதனைக்கொல்லுவது தர்மமல்ல வென்பதை அவனுக்கு வெகுவாக எடுத்துச்சொல்லி ஏதாவது ஒரு அங்கத்தை பங்கம்செய்து அனுப்பி விடும்படி

ஹநுமார் ஸீதைக்கு கணையாழி மோதிரம் காண்பித்தல்.

ஸுக்ரீவர், ஸீதை, ஸ்ரீராமர், லக்ஷ்மணர், ஹநுமார். ஹநுமார் இரண்டு கைகளிலும் இரண்டு லிங்கங்களை வைத்துக்கொண்டிருப்பதை கவனிக்கவும்.

வேண்ட ராவணனும் அவ்வாறே ஹநுமாரின் வாலில் துணிகளைச்சுற்றி அக்னியால் கொளுத்திவிட்டு அனுப்பிவிடும்படி உத்தரவிட்டான். அவ்விதமே வால் கொளுத்தப்பட்டதும் ஹநுமாரானவர் ஸீதாதேவியின் பிரபாவத்தால் கொஞ்சமேனும் உஷ்ணம் தாக்கப்படாதவராய் அந்த நெருப்பைக்கொண்டே லங்கை முழுமையும் கொளுத்திவிட்டுத் திரும்பி ஸமுத்திரத்தைத் தாவித்தாண்டி ஸ்ரீராமரிடம் வந்து ஸீதையைக்கண்ட விவரத்தைத் தெரிவித்தார். உடனே ஸ்ரீராம லக்ஷ்மணர்களும் ஸுக்கிரீவனுடனும் வானர ஸைந்யங்களுடனும் தெற்கு மஹா ஸமுத்திரத்தையடைந்து ஸமுத்திரத்தைத் தாண்டுவதற்கு உபாயம் தேடி நின்றார்கள். அச்சமயம் ஸ்ரீராமரானவர் தர்ப்பசயனம் என்னும் க்ஷேத்ரத்தில் தர்ப்பத்தின்பேரில் சயனித்துக்கொண்டு ஸமுத்திர ராஜனை தியானித்து அழைத்தும் அவன் வாராமையால் மிகவும் கோபம்கொண்டு தனது ஒரு பாணத்தால் ஸமுத்திரம் முழுமையையும் வற்றடித்து விடுவதாக ஆரம்பிக்கவே ஸமுத்ர ராஜன் பயந்து நடுங்கி தனது பத்னிகளுடன் ஓடோடியும் வந்து ஸ்ரீராமரை வணங்கிநின்றான். ஸ்ரீராமரும் தானும் தனது ஸைன்யங்களும் லங்கைக்குச் செல்வதற்காக ஸமுத்ரத்தில் அணை கட்டுவதற்கு இடம் கொடுக்கும்படி ஆக்ஞாபிக்க அவ்வண்ணமே ஸமுத்ராஜனும் உடனே இடம்கொடுத்தான். விசுவகர்மாவின் புத்ரனாகிய நளன் என்பவனைக்கொண்டு உடனே ஸமுத்ரத்தில் 10 யோஜனை அகலமும் 100 யோஜனை நீளமுமுள்ள அணையானது கட்டப்பட்டது. பிறகு உப்பூரிலுள்ள விநாயகரை பூஜை செய்துவிட்டு தேவிப்பட்டணம் அல்லது நவபாஷாணம் என்று சொல்

ராமேசுவரம் அம்மன் கோயிலுக்கு முன்னதாகவிருக்கும் கல்யாண மண்டபம்.

லப்படுமிடத்தில் ஒன்பது கல்லுகளில் நவக்கிரஹங்களைப் பிரதிஷ்டைசெய்து பூஜித்துவிட்டு ஸ்ரீராமரானவர் புதிதாகக் கட்டப்பட்ட ஸேதுவழியாக ஸைந்யங்களுடன் புறப்பட்டு இப்பொழுது ராமேசுவரம் இருக்கும் கந்தமாதன பர்வதத்தின் சிகரம் வந்ததும் அங்கு ஏற்கனவே இருந்த மஹாதேவனுகிய ஈசுவரனைப் பூஜைசெய்து அவருடைய அநுக்ரஹத்தைப் பெற்றுக்கொண்டு அங்கிருந்துலங்கைசென்று ராவணனுடன் யுத்தம்செய்து அவனுடைய ஸைந்யங்களை யெல்லாம் த்வம்ஸம செய்துவிட்டு அவன் புத்ரர்கள், தம்பியாகிய கும்பகர்ணன், இவர்களைக்கொன்ற பிறகு தசகண்டனையும் யுத்தத்தில் கொன்று ஸீதாதேவியை அழைத்துக் கொண்டு எல்லோருடனும புஷ்பகவிமானத்திலேறி லங்கையிலிருந்து திருப்பி அயோத்யைக்குப் போகும் மார்க்கத்தில் மீளவும் இந்த ராமேசுவரக்ஷேத்ரத்திற்கு வந்து சேர்ந்தார். தான் லங்கைக்குப போகும்பொழுது ஸீதை தன்னுடனில்லாததாலும் இப்பொழுதுதான் அவள் முதன்முதலில் இந்தக்ஷேத்ரத்திற்கு வந்திருப்பதாலும் ஸ்ரீராமரானவர் ஸீதைக்கு இந்த க்ஷேத்ரத்தினுடையவும் தீர்த்தத்தினுடையவும் மூர்த்தியினுடையவும் மஹிமையைப் பின்வரும் சுலோகங்களால் எடுத்துக் கூறுகிறார்.

एतत्तु दृश्यते तीर्थं सागरस्य महात्मनः । सेतुबन्ध इति ख्यातं त्रैलोक्येनाभिपूजितम् ॥
एतत्पवित्रं परमं महापातकनाशनम् । अत्र पूर्वं महादेवः प्रसादमकरोत्प्रभुः ॥

இதனால் ஸ்ரீராமர் அங்கு வரும்பொழுது ஏற்கனவே அங்கே ஈசுவரனானவர் மஹாதேவமூர்த்தியாக இருந்து ஸ்ரீராமனை அநுக்ரஹம் செய்திருக்கிறார் என்பது நன்கு விளங்குகிறது.

ராமேசுவரம் கோயில் மூன்றாவது பிராகாரத்திலிருக்கும் மாதவதீர்த்தக்குளம்.

ஸ்ரீராமர் சிவலிங்கப்பிரதிஷ்டை செய்தது.

இவ்வாறு தசகண்டனான ராவணனை ஸம்ஹாரம் செய்துவிட்டு ஸீதாதேவியுடன் ஸ்ரீராமானவர் கந்தமாதனபர்வதத்தில் வந்திருக்கிறார் என்கிற செய்தி தெரிந்தவுடன் தண்டகாரண்யவாஸிகளான மஹர்ஷிகளெல்லாரும் ஸ்ரீராமரையும் அவரால் கட்டப்பட்ட ஸேதுவையும் தர்சிப்பதற்காக இங்கு வந்து சேர்ந்தார்கள். ஸ்ரீராமரைக்கண்டதும் வெகுவாக ஸ்தோத்ரித்து நமஸ்கரித்தார்கள். ஸ்ரீராமரும் அவர்களை மிகவும் ஆதரவுடன் வரவேற்று உபசரித்துத்தான் மஹாப்பிராமணனான ராவணனை ஸமஹாரம் செய்ததால் தனக்கு ஏற்பட்டிருக்கும் தோஷத்தை நிவர்த்தி செய்துகொள்ள உபாயம் சொல்லவேண்டுமென்று கேட்டார். அதற்கு அம்மஹர்ஷிகள் "ஹே ராமா, தர்மத்தை அனுஷ்டித்துக் காட்டுவதற்காகவே உருவெடுத்து வந்த தாங்கள் பிராம்மணனைக் கொன்ற தோஷத்தைப்போக்குவதற்காக பிராயச்சித்தம் செய்து காட்டவேண்டுவது மிகவும் ஸரியானதே. இத்தகைய மஹாபாபங்களெல்லாம் சிவலிங்கப்பிரதிஷ்டை செய்து பூஜிப்பதால்தான் போகும என்று தர்மசாஸ்திரங்கள் கூறுகின்றன. சிவலிங்கப்பிரதிஷ்டை செய்வதற்கு இந்த க்ஷேத்ரம் மிகவும் சிலாக்யமானது. இதன் மஹிமையைக்குறித்து சுருதியிலேயே பின்வருமாறு கூறியிருக்கின்றது.

द्वौ समुद्रौ विततावजूर्यौ पर्यावर्तेते जठरेव पादाः । तयोः पश्यन्तोऽतियन्त्यन्यमपश्यन्तः सेतुनातियन्त्यन्यम् ।

விசாலமுமழிவற்றதுமான இரண்டு ஸமுத்ரங்களும் தாயின் வயிற்றில் குழந்தையின் கால்கள் புரளுவது போல் புரளுகின்றன. இவைகளுக்கு நடுவிலிருக்கின்ற ஸேதுவை தர்சிக்கிறவர்கள் ஸம்ஸாரத்தைத்தாண்டுகிறார்கள். அதைத்தர்சிக்காதவர்கள் ஸம்ஸாரத்தைத் தாண்டுவதில்லை. ஆதலால் இந்த மஹாக்ஷேத்ரத்தில் நல்லமுகூர்த்தத்தில் தாங்களும் சிவ

ராமேசுவரம் கோயில் கீழ
கோபுரவாசல்.

லிங்கப்பிரதிஷ்டை செய்தால் அது தங்கள் பெயராலேயே ராமநாதர், ராமேசுவரர், ராமலிங்கம் என்ற பெயர்களுடன் ஆசந்திரதாரம் மிகப் பிரஸித்தியடைந்து விளங்கும்" என்றார்கள். இதைககேட்ட ஸ்ரீராமர் மிக்க உத்ஸாஹத்துடன் தனது பிரியதூதனான ஹநுமாரை அழைப்பித்து உடனே கைலாஸத்துக்கு வேகமாகச் சென்று குறிப்பிடப்பட்ட நல்ல முகூர்த்தத்திற்குள் சிவலிங்கம் ஒன்று கொண்டுவரும்படி ஆக்ஞாபித்தார். இவ்விதம் ஆகஞாபிக்கபபட்டதும், ஹநுமானனவர் தனது புஜங்களைத் தட்டிக்கொண்டு எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கையில் கந்தமாதன பர்வதததை நடுங்கச்செய்து உயரக்கிளம்பி ஆகாசமார்க்கத்தைக் கடந்து கைலாஸபர்வதம் வந்து சேர்ந்தும் அங்கு லிங்கரூபியான ஈசுவரனைக் காணாததால் லிங்கத்தை அடைவதற்காக பரமசிவனைக் குறித்து உக்ரமாக தபஸ் செய்யவாரம்பித்தார். உடனே பரமசிவனும் அவருக்குப் பிரஸன்னராகி திவ்யமான லிங்கத்தைக் கொடுத்தருளினர். அதைபெடுத்துக்கொண்டு குறிப்பிட்ட நல்ல முகூர்த்தம் ஆய்விடப்போகிறதேயென்று கவலையுடன் அதிவேகமாக ஹநுமார் திருமபி வருகையில் வழியில் நாரதரைக்கண்டார். இவ்வளவு அவஸரமாகப் போகும் காரியம் என்னவென்று நாரதர் கேட்க ஹநுமார் விஷயத்தையெல்லாம் சொன்னர். உடனே நாரதர் "மிகவும் யுக்தமான காரியம். ஆனுல் ஸ்ரீராமர் மாதிரியாகவே நீயும்தானே லங்கையில் யுத்தத்தில் அநேகம் பேர்களைக் கொன்றிருக்கிறாய். ஆதலால் நீயும் ஒரு சிவலிங்கப்பிரதிஷ்டை செய்தால் உன் பாபங்களும் தொலைந்துவிடுமே. இனி திரும்பவும் கைலாஸம் சென்று வருவதானல் காலதாமதாய்விடும். இங்கு ஸமீபத்திலுள்ள நர்மதாதீரத்திலிருந்து நல்லதாக ஒரு லிங்கம் எடுத்துக்கொண்டுபோய் நீயும் அந்த நல்ல முகூர்த்தத்தில் அதை பிரதிஷ்டை செய்து விடுவது மிகவும் சிரேயஸ்கரம் என்று எனக்குத் தோன்றுகிறது" என்றார். ஹநுமாரும் நாரதர் வார்த்தையிலீடுபட்டு நர்மதாதீரம் சென்று இன்னுமொரு லிங்கத்தையும் எடுத்துக்கொண்டு அதிவேகமாககந்தமாதனபர்வதத்திற்கு வந்துசேர்ந்தார். இதற்குள்ளாக குறிப்பிடப்பட்டிருந்த சுபமுகூர்த்தம் போய் விடுகிறதென்று மஹர்ஷிகள் அவசரப்பட்டார்கள். சுபமுகூர்த்தம் இன்னும் அதிஸ்வல்பம்தான் மிச்சமிருப்பதை

ராமலிங்கஸ்வாமி பிரதிஷ்டை.



ராமநாதஸ்வாமி கைலாஸவாஹன உத்ஸவம்.

யும், ஹநுமார் இன்னும் வாராமலிருப்பதையும் கண்டு மஹர்ஷிகள் ஸ்ரீராமரைப் பார்த்து "ஹநுமாரை எதிர்பார்த்துக்கொண்டு இனி தாமஸிப்பது உசிதமல்ல; ஸீதாதேவியானவள் லீலையாக ஒரு ஸைகதலிங்கம் பிடித்து வைத்திருக்கிறாள். அதை உடனே லக்னம் போவதற்குள் பிரதிஷ்டை செய்துவிடவேண்டும்" என்று சொன்னார்கள். இதைக்கேட்ட ஸ்ரீராமர் உடனே ஸீதாதேவியுடன் பத்தகங்கணராய் ஆனிமீ சுக்லபக்ஷம் தசமிதிதி புதவாரம் ஹஸ்தநக்ஷத்ரம் கரஜாகரணம் வ்யதீபாதம் கன்னியில் சந்திரன் விருஷபத்தில் ஸூர்யன் கூடிய சுபமுகூர்த்தத்தில் கந்தமாதனபர்வதசிகரத்தில் நளஸேதுவின் மத்தியில் ஸீதாதேவியால் உண்டாக்கப்பட்ட ஸர்வசிரேஷ்டமான ஸைகதலிங்கத்தைப் பிரதிஷ்டைசெய்து அந்த ஈசுவரனைப் பலவாறு பூஜித்தார். இந்த ஈசுவரனுடைய அம்பாளுக்குத்தான் பர்வதவர்த்தனியென்று பெயர்.

இவ்வாறு ஸ்ரீராமரானவர் ஈசுவரனைப் பூஜித்துக்கொண்டிருக்கும் ஸமயத்தில் ஹநுமார் கைலாஸத்திலிருந்து லிங்கத்துடன் ஓடோடியும் வந்தார். வந்ததும் இவ்விடத்தில் பிரதிஷ்டை முடிந்து பூஜை நடந்துகொண்டிருந்ததைக்கண்டதும் அவருக்கு உண்டான துக்கத்தை எடுத்துரைக்க வொண்ணாது. அவருக்கு எல்லோர் முன்னிலையிலும் ஸ்ரீராமர் தன்னை அவமானப்படுத்தியதாகத் தோன்றிவிட்டது. ஸ்ரீராமரை நோக்கிப்பின் வருமாறு வாய்விட்டலறினார். "ஹே, ராம, இவ்வுலகத்தில் துக்கத்தை அனுபவிப்பதற்காகவே என்ஜன்மம் ஏற்பட்டிருக்கிறது. என்னைப்போலொரு புத்திரனை ஒரு ஸ்திரீயும் பெறலாகாது. முதலில் ஸேவகாவிருத்தியால் எண்ணிறந்த துக்கங்களையனுபவித்தேன். பிறகு ராக்ஷஸர்களிடம் மிகக்கஷ்டப்பட்டேன். பிறகு யுத்தத்தில் இதைப்பார்க்கிலுமதிக துக்கம். இப்பொழுது தாங்கள் என்னை அவமதித்ததாலுண்டான துக்கத்துக்கு எல்லையே இல்லை.



பர்வத வர்த்தனி அம்பாள் தங்கப்பல்லக்கு உத்ஸவம்.

ஸுக்ரீவன் பார்யையை யடையும்பொருட்டும், விபீஷணன் ராஜ்யமடையும் பொருட்டும் தங்களை யடைந்து ஸேவித்தார்கள். நானோவெனின் யாதொரு காரணமுமின்றி நிஷ்காமனாய் பிரதிபலன் யாதொன்றையுமிச் சிக்காதவனாய் தங்களை ஆச்ரயித்திருக்கிறேன். அநேகம் வானரர்களிருக்கையில் கைலாஸ பர்வதத்துக்குச்சென்று சிரேஷ்டமான லிங்கத்தைக் கொண்டுவரும்படி தாங்கள் என்னை ஆக்ஞாபிக்கும்படி யான்பாக்யத்தை இன்றுபெற்றேன். அந்த ஆக்ஞையை சிரஸாவஹித்தது ஓடோடியும்சென்று கைலாஸத்தை யடைந்தேன். ஆனால் அங்கே பரமசிவனைக்காணவில்லை. உடனே உக்ரமான தபஸ்ஸைச்செய்து ஈசுவரனை திருப்தி செய்தேன். அவர் பிரஸன்னராய் லிங்கத்தைக்கொடுத்ததும் வாங்கிக் கொண்டு திரும்பி வருவதற்குள் தாங்கள் இங்கு வேறு மணல் லிங்கத்தை பிரதிஷ்டை செய்து என்னை அவமானம் செய்துவிட்டீர்கள். என் பிரயாஸமெல்லாம் வீணாகப் போய்விட்டது. இந்த துக்கம் என்னால் ஸகிக்கமுடியவில்லை. துர்பாக்கியனான என்னுடைய சரீரம் பூபாரமேயொழிய வேறில்லை. நான் என்னசெய்வேன். எங்கு செல்வேன். எனக்கோ தங்களைத்தவிர வேறு கதிகிடையாது. தங்களாலேயே இவ்வாறு அவமதிக்கப் பட்டபடியால் என் சரீரத்தை இனிவைத்துக்கொண்டிருப்பதைக் காட்டிலும் விட்டுவிடுவதே நலமென்று தீர்மானித்துவிட்டேன்'' என்று பலவாறாகப் புலம்பிககொண்டு துக்கத்தால் மனக்கலக்கமுற்று ஸ்ரீராமருடைய சரணாவிந்தங்களில் தண்டம்போல் விழுந்து நமஸ்கரித்தார். இதைக்கண்ட ஸ்ரீராமர் பலவாறாக அவருக்கு ஸமாதானங்கள் சொல்லித்தேற்றினார். "நீசெய்தது நான்செய்தது, நான்செய்தது நீசெய்தது தான். நான்செய்த லிங்கப்பிரதிஷ்டை நீசெய்த லிங்கப்பிரதிஷ்டைதான். குறிப்பிட்டலக்னம் தவறிவிடுவதாயிருந்தபடியால் ஸீதை செய்திருந்த ஸைகதலிங்கத்தை மஹர்ஷிகளின் வாக்யத்தை யனுஸரித்துப் பிரதிஷ்டை செய்தேன். அதனால் உனக்குக்கோபமும் வேண்டாம், துக்கமும்



ராமநாதஸ்வாமி கோயில் மேற்கு கோபுரவாசல்.

வேண்டாம். கைலாஸத்திலிருந்து வந்திருக்கும் லிங்கத்தை இந்த சுபதினத்தில் நீ பிரதிஷ்டைசெய். அந்தலிங்கம் மூவுலகங்களிலும் உன்பெயரால் பிரஸித்தியடையட்டும். எல்லோரும் முதலில் ஹநுமதீசுவரனை தர்சித்துவிட்டுப் பிறகு ராமேசுவரனை தர்சிக்கட்டும். நீயும் பிரம்மகுலத்தில் பிறந்த அநேக ராக்ஷஸக்கூட்டங்களை வதம்செய்திருப்பதால் உனக்கு அதனாலுண்டான தோஷம் இந்த லிங்கப்பிரதிஷ்டையால் நிவர்த்தியாகட்டும்.'' என்றுசொல்லி ஆசுவாஸப்படுத்தினர். ஆனால் ஹநுமாருக்கு ஸமாதானமாகவில்லை. அதையறிந்த ஸ்ரீராமர் அவருக்கு புத்தி புகட்டவேண்டி கடைசியாக சொன்னதாவது: "உனக்கு நான் இவ்வளவு சொல்லியும் மனஸமாதானப் படாவிட்டால் இதோ ஸீதையால் பிடிக்கப்பட்டு நான் பிரதிஷ்டை செய்திருக்கும் இந்தஸைகதலிங்கத்தை பிடுங்கியெறிந்து விட்டாயேயானால் நீ கொண்டுவந்த லிங்கத்தை உடனே ஸ்தாபித்து விடுகிறேன். உனக்கு மனஸ்தாபம் வேண்டாம்'' என்றார். உடனே ஹநுமார் கர்வத்தால் தான் செய்யப்போகும் கார்யத்தின் உசிதத்தப்பைக் கவனியாமல் நொடிப்பொழுதில் அந்த மணல் லிங்கத்தை பிடுங்கியெறிந்து விடலாமென்று நினைத்து ஸமஸ்த தேவர்கள், மஹர்ஷிகள், ராக்ஷஸர்கள், ஸ்ரீராமர், லக்ஷ்மணர், ஸீதை முதலிய எல்லோர் முன்னிலையிலும் மிகவும் அலக்ஷ்யமாய் தனது ஒருகையால் அந்த லிங்கத்தை பிடுங்கப்பார்த்தார். அது அசையவில்லை. பிறகு இரண்டு கைகளாலும் அதை கெட்டியாய் பிடித்துக்கொண்டு தன்னால் இயன்றமட்டில் முழுபலத்தோடும் அசைத்துப்பார்த்தார்; சற்றேனும் அசையவில்லை. பிறகு அந்த லிங்கத்தை தனது வாலால் சுற்றி கைகளை பூமியிலூன்றிக்கொண்டு மூச்சையடக்கி இழுத்தார். அப்பொழுது அந்தலிங்கம் அசையவில்லை, ஆனால் ஹநுமாரானவர் வாலறுந்து ஒரு குரோசத்துக்கப்பால் ரத்தத்தைக்கக்கிக்கொண்டு படபடவென்று துடித்துக்கொண்டு பூமி நடுங்கும்படி சப்தித்துக்கொண்டு பூமியில் மூர்ச்சித்து விழுந்தார். அவருடைய கண்கள் முதலிய நவத்வாரங்களிலிருந்தும் பீரிட்டடித்தரத்தம் ஒரு தாடகம்போல் ஆயிற்று. அப்பொழுது எல்லோரும் அவரிடம் ஓடிவந்து அவர் விழுந்து கிடந்ததைக்

அஷ்டலக்ஷ்மீ மண்டபமும் அதில் த்வஜஸ்தம்பமும், ஸேதுபதிகளின் சிலைகளும்.

கண்டு துக்கித்தபொழுது ஸ்ரீராமரும் ஸீதாதேவியும் தங்களது கைகளால் அவர் சரீரத்தைத் தடவிக்கொடுத்து ஆசுவாஸப்படுத்தி எழுப்பினர்கள். மூர்ச்சை தெளிந்தெழுந்த ஹநுமாரானவர் தனது புத்திக்குறவையறிந்து வெகுவாக ஸ்ரீராமரையும் ஸீதையையும் ஸ்தோத்ரித்து தன் முறட்டுத்தனத்தை க்ஷமிக்கும்படி பிரார்த்தித்தார். அவ்வாறே ஸ்ரீராமரும் கருணையுடன் அவரைநோக்கி "ஹே வானரசிரேஷ்ட, அறியாமையால் உன்னால் இந்த முறட்டுத்தனம் செய்யப்பட்டது. ஸீதை பிடித்து நான் பிரதிஷ்டை செய்த இந்த லிங்கத்தை எவராலும் பிடுங்குவது ஸத்தியமாக மாட்டாது. சிவாபராதத்தால்தான் நீ இன்று மூர்ச்சித்து விழுந்தாய். இனி இவ்வண்ணம் செய்யாதே. நீ விழுந்த இந்த இடமானது இன்றுமுதல் மூவுலகங்களிலேயும் உன்பெயராலேயே ஹநுமத்குண்டம் என்று பிரஸித்தியடையட்டும். இந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வதால் பிரயாகையில் த்ரிவேணியடை ஸ்நானம் செய்த பலனுண்டாகட்டும்" என்றார். இவ்விதம ஸ்ரீராமரால் அநுக்ரஹம செய்யபபட்ட ஹநுமார் தான் கொண்டுவந்த லிங்கத்தை ஸ்ரீராமருடைய ஆக்ஞைப்படி ஸ்ரீராமநாதருக்கு வடபாகததில் உதஸாகத்துடன் பிரதிஷ்டைசெய்தார். அந்தலிங்கம் இப்பொழுது விசுவேசுவரரென்று சொல்லப்படுகிறது. இதை தர்சனம் செய்துவிட்டுத்தான் ஸ்ரீராமநாதரை தர்சிக்க வேண்டும். பிறகு ஸ்ரீராமனுதருடைய ஸந்நிதிக்கு முன்பக்கத்தில் கிழக்கு கோபுரவாசலுக்கு வெளியில் வடபுறத்தில் தனக்காக ஒரு கோயில் ஏற்படுத்திக்கொண்டு அதற்குள்ளேயே மேல்பக்கததில் தான் நர்மதையிலிருந்து கொண்டுவந்த லிங்கத்தைபிரதிஷ்டைசெய்து அங்கேயே ஸ்ரீராமரை தியானம்செய்துகொண்டு இன்றும் காணப்படுகிறார். ஹநுமார் வாலால் சுற்றிய மூன்று சுற்றின் வடுவையும் ஸ்ரீராமநாதர் இன்றும் தரித்துக்கொண்டிருப்பது யாரும் காணலாம்.

சொக்கட்டான்மண்டபத்தில் ராமநாதபுரம் ஸேதுபதிகளின் சிலைகள்.

ஸீதை ஸ்ரீ ராமர் லக்ஷ்மணர்

விசேஷதீர்த்தங்கள்.

ஸ்ரீ ராமராக்ஞைப்படி விசுவகர்மாவின் புத்ரனுகிய நளனுல் கட்டப்பட்ட இந்த ஸேதுவில் அநேக புண்யதீர்த்தங்கள் இருக்கின்றன. அவைகளுள் இருபத்தினன்கு தீர்த்தங்கள் மிகவும் முக்கியமானவை. அவையாவன—சக்ரதீர்த்தம, வேதாளவாததீர்த்தம் பாபவிநாசதீர்த்தம், ஸீதாஸரஸ், மங்களதீர்த்தம, அமிருதவாபிகா, பிர்மகுண்டம், ஹநுமத்குண்டம், அகஸ்திய தீர்த்தம், ராமதீர்த்தம், லக்ஷ்மணதீர்த்தம், ஜடாதீர்த்தம், லக்ஷ்மீதீர்த்தம், அக்னிதீர்த்தம், சக்ரதீர்த்தம், சிவதீர்த்தம், சங்கதீர்த்தம், யமுனுதீர்த்தம், கங்காதீர்த்தம், கயாதீர்த்தம், கோடிதீர்த்தம், ஸாத்யாமிருததீர்த்தம், ஸர்வதீர்த்தம், தனுஷ்கோடி தீர்த்தம்—ஆக 24.



இந்தியாவிலிருந்து ராமேசுவரம்போகும் வழியிலுள்ள பாம்பன்கால்வாய்க்கு ஏற்பட்டிருக்கும் ரயில்பாலம். இதன்பேரில் ரயில்வரும்பொழுது எடுக்கப்பட்டது இந்த படம். கப்பல்கள் பாம்பன் கால்வாயில் செல்லும்பொழுது இப்பாலத்தை நடுவில் இரண்டாக பிளந்து இரண்டுபக்கத்திலும் தூக்கிவிடலாம்.

சக்ரதீர்த்தம்.

இது ஸேது மூலத்தில்உள்ளது. ஸேது மூலம் அதாவது ஸேது கட்டுவதற்கு ஆரம்பிக்கப்பட்ட பிரதேசம் என்பது நவபாஷாணம என்று சொல்லப்படும் தேவீபட்டணத்துக்கும் தர்ப்பசயனத்துக்கும் மத்தியபாகம். இந்த தீர்த்தமானது இவ்வளவு விஸ்தாரமாக ஆதிகாலத்திலிருந்தது. பிறகு தேவேந்திரனனவன் பர்வதங்களின் இறகுகளை சேதித்தபொழுது அந்த பர்வதங்கள் இந்த தீர்த்தத்தின் மத்தியில் வந்து விழுந்தமையால் நடுபாகங்களில் தூர்ந்துபோய் இப்பொழுது தேவிபட்டணத்திலும் தர்பசயனத்திலும் மட்டில் இந்த சக்ரதீர்த்தம் காணப்படுகிறது. இதற்கு முதலில் தர்மபுஷ்கர்ணி என்று பெயர். இதன் கரையில் காலவமஹரிஷி விஷ்ணுவை குறித்து தபஸ்செய்து அவரை ஸந்தோஷப்படுத்தி அவரிடமிருந்து அநேகவரன்களை பெற்றூர். ஒருஸமயம் இவர் தர்மபுஷ்கரணிக்கரையில் விஷ்ணுவை பூஜித்து அவரையேத்யானம்செய்துகொண்டிருக்கையில் ஒரு ராக்ஷஸனனவன் இவரை விழுங்கிவிடுவதற்காக நெருங்கி இவரை கிரஹித்தபொழுது ஸ்ரீமஹாவிஷ்ணுவானவர் தமது பக்தனுக்கு நேர்ந்திருக்கும் ஆபத்தை விலக்கக்கருதித் தமது சக்ராயுதத்தை அந்த ராக்ஷஸனைக் கொன்றுவிட்டு வரும்படி ஆக்ஞாபித்தார். அவ்விதமே அந்த திவ்யமயமான ஸுதர்சன சக்ரமானது அந்த ராக்ஷஸனின் தலையை ஒரு நொடிப்பொழுதில் அறுத்துவிட்டது. உடனே காலவமஹர்ஷியானவர் அந்த சக்ரத்தை



பாம்பன்கால்வாய்பாலம் கப்பல்வருவதற்காக நடுவில் தூக்கப்பட்டிருக்கிறது. புகைக் கப்பல் போவதைக்காணலாம்.

பலவாறாகத் துதிசெய்து தர்மபுஷ்கரணியிலேயே ஸதா தங்கியிருக்கும்படி பிரார்த்திக்க அதுவும் அதற்கிணங்கிற்று. அதுமுதல் அதற்கு சக்ரதீர்த்தமென்று பெயர்.

தேவீபட்டணம் என்னும் நவபாஷாணம்.

முன்னொருகாலத்தில் தேவதைகளையெல்லாம் ஹிம்ஸைசெய்த மஹிஷாஸுரனைக்கொல்வதற்காக எல்லாதேவதைகளுடைய தேஜஸ்ஸுடனும் ஆவிர்பவித்த ஸாக்ஷாத் பராதேவதையானவள் மஹிஷாஸுரனுடன் யுத்தம்செய்து அவனுடைய ஸைன்யங்களையெல்லாம் நாசம்செய்து கடைசியில் அவனையும் விரட்டும்பொழுது அவன் ஓடோடியும் சென்று மஹோததியின் கரையிலிருந்த இந்த சக்ரதீர்த்தமானது விஸ்தாரமாக இருந்ததால் அதற்குள்ளிறங்கி ஒளிந்துகொண்டான். துர்க்காதேவியானவள் அங்குவந்து அவன் ஜலத்தில் ஒளிந்துகொண்டிருப்பதை யறிந்து தமது வாஹனமாகிய ஸிம்ஹத்தை அந்த ஜலம் முழுமையும் குடித்துவிடும்படிகட்டளையிட்டாள். அவ்வாறே அந்த ஸிம்ஹம் செய்ததும் அந்த அசுரன் வெளிக்கிளம்பினான். உடனே தேவியானவள் அவனை ஸம்ஹரித்தாள். பிறகு அந்த சக்ரதீர்த்தத்தில் தன்கையிலுள்ள அமிருதகலசத்திலிருந்து அமிருதத்தை விட்டு பூர்த்திசெய்து அந்தவிடத்தில் தன் பெயரால் ஒருபட்டணம் நிர்மாணம்செய்யும்படி தேவியானவள் ஏற்பாடுசெய்தாள். அப்படியே ஏற்பட்டபட்டணம்தான் தேவீபட்டணம். பிறகு ஸ்ரீராமர் லங்கைக்குச் செல்லுவதற்காக ஸேது கட்டியபொழுது இவ்விடத்தில் ஒன்பது கல்லுகளில் ஒன்பது நவக்கிரஹங்களையும் பிரதிஷ்டைசெய்து பூஜித்தார். இந்த ஒன்



ராமேசுவரம்கோயில் புதிதாககட்டுவதற்காக இடிக்கப்பட்டிருந்தஸமயத்தில் எடுத்த படம். பெரிதாகவிருக்கும் விமானம்தான் ஸ்ரீராமநாதர்கோவில். சிரியவிமானம்தான் ஹநுமார் பிரதிஷ்டைசெய்த விசுவேசார்கோவில். இதற்குஇடதுபக்கத்தில் ஜனங்கள் கூட்டமாய் ஸ்நானம்செய்யுமிடம்தான் கோடிதீர்த்தம் இதைசுற்றிலும் இரும்புக் கம்பிகள் போடப்பட்டிருக்கின்றன.

பது கல்லுகளும் இன்றும் அந்த ஸமுத்திரத்தில் காணப்படுகிறது. இதனால்தான் இதற்கு நவபாஷாணம் என்று பெயர்வந்தது.

கோடிதீர்த்தம்.

ஸ்ரீ ராமரானவர் ராமநாதஸ்வாமியை பிரதிஷ்டைசெய்தபிறகு பிரதிதினமும் அவருக்கு பூஜை செய்வதற்காக அபிஷேகத்திற்கு தீர்த்தம் வேண்டியிருக்குமாதலால் தமது வில்லின் கோடி (நுணி)யால் ராமநாதருக்கு வடபாகத்தில் பூமியில் குத்தி ஒரு தீர்த்தம் உண்டாக்கினர். அதுதான் கோடிதீர்த்தம் என்று வழங்குவது. இது மிகவும் விசேஷமான தீர்த்தமென்று யாத்திரைக்காரர்களெல்லாம் இதிலிருந்துதான் தீர்த்தம் எடுத்துச் செல்லுவது வழக்கம். இந்த ராமேசுவா க்ஷேத்திரத்திலுள்ள அநேக தீர்த்தங்களுள் எதில் ஸ்நானம் செய்தாலும் செய்யாவிட்டாலும் இதில் ஜனங்கள் கட்டாயம் ஸ்நானம்செய்வார்கள். ஆதலால் இதை நான்குபக்கங்களிலும் இரும்புக்கம்பிகள்போட்டு பந்தோபஸ்து செய்து அந்த கோவில் பண்டாக்கள் தங்கள்வசத்தில் வைத்துக்கோண்டு தாங்கள்தான் அதிலிருந்து தீர்த்தம் எடுத்துக் கொடுக்கவேண்டுமென்று ஒருபாத்தியம் கொண்டாடுகிறார்கள். இந்த பண்டாக்களெல்லாம் ஆரியாள் என்று சொல்லப்படும் ஒரு மஹாராஷ்டிரவகுப்பினர்.

ஸர்வதீர்த்தம்.



ஸர்வதீர்த்தம்.

இந்த தீர்த்தமானது ஸ்ரீராமனாதரது ஸந்நிதிக்கு முன்பாகத்தில் வலதுபக்கத்திலிருக்கிறது. முன்னொருகாலத்தில் ஸுசரிதர் என்ற ஒரு மஹர்ஷி மிகவும் விருத்தாப்பியராய் கண்களின் பார்வையெல்லாம் கெட்டுப்போய் அதிக அசக்தராயிருந்தார். ஆனால் அவருக்கு இந்த பாதகண்டத்திலுள்ள எல்லா தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்யவேண்டுமென்று அவா அதிகமாகவிருந்தது. அதற்காக அவர் கந்தமாதன பர்வதத்திற்குச்சென்று அங்கு ஈசுவரனைக்குறித்து தபஸ் செய்தார். ஈசுவரனும் பிரஸன்னராய் என்னவேண்டுமென்று கேட்டபொழுது தனது அவாவைத்தெரிவித்தார். உடனே ஈசுவரன் எல்லா தீர்த்தங்களையும் தாம் அங்கேயே தருவித்து விடுவதாகவும் அதில் ஸ்நானஞ்செய்து எல்லா தீர்த்தங்களின் ஸ்நானபலனையுமவர் அடையலாமென்றும் சொல்லி உடனே இந்த ஸர்வதீர்த்தத்தை யுண்டாக்கினார். அதில் ஸ்நானம் செய்ததும் ஸுசரித மஹர்ஷிக்கு கிழட்டுத்தனம் தள்ளாமை கண் தெரியாமை முதலிய எல்லாம் நிவர்த்தியாய் அரோகத்ருடகாத்திரமுள்ள யுவாவாக மாறிவிட்டார்.

ராமேசுவரம் கோயில் கிழக்கு கோபுரவாசலுக்கு வெளியிலிருக்கும் ஹநுமார் கோயில்.

இந்த ஸர்வதீர்த்தம் இதற்கு முன் சொல்லிய கோடிதீர்த்தம் இவை இரண்டையும்பற்றி ஒரு விசேஷமுள்ளது. சென்ற 1838௵த்தில் சிருங்ககிரி வியாக்யான ஸிம்ஹாஸனத்தை யலங்கரித்திருந்த ஸ்ரீ நரஸிம்ஹபாரதீஸ்வாமிகள் விஜயயாத்திரையாகப் புறப்பட்டு விளம்பி வருஷத்தில் முதல்தடவை ராமேசுவாத்திற்கு விஜயம் செய்தார்கள். அச்சமயம் ஸ்ரீ மஹாஸ்வாமிகளவர்கள் எல்லா தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்துகொண்டு கோடிதீர்த்தம் வந்ததும் அங்குள்ள ஆர்யவகுப்பினரான



ராமேசுவரம் கோயில் தெற்கு கோபுரவாசல். பூர்த்தியாகாமலிருக்கிறது.
பக்கத்திலிருந்தெடுத்த படம்.

பண்டாக்கள் தாங்கள் தான் அதிலிருந்து ஜலம் எடுத்துக்கொடுப்போமென்றார்கள். ஸ்ரீ மஹாஸ்வாமிகள் எவ்வளவு சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. உடனே ஸ்ரீ மஹாஸ்வாமிகள் அந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்யாமலே அதை விட்டுத்திரும்பி இந்த ஸர்வதீர்த்தத்திற்கு வந்து கோடிதீர்த்தத்தையுமடக்கிக்கொண்டிருக்கிற இந்த தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தால் எல்லா தீர்த்தத்திலும் ஸ்நானம் செய்தபலம் ஒரேகாலத்தில் வருவதாயிருப்பதால் இதுமுதல் எல்லாரும் ஸர்வதீர்த்தஸ்நானமே செய்யவேண்டியது என்று ஆக்ஞை செய்துவிட்டு தானும் ஸர்வதீர்த்தத்தில் ஸ்நானம் செய்துகொண்டு ஸ்ரீமடத்துக்கு வந்தார்கள். இந்தப்பிரகாரம் ஸ்ரீ மஹாஸ்வாமிகளால் செய்யப்பட்ட உத்தரவு சுமார் நாற்பது வருஷகாலம் வரை எல்லா ஜனங்களும் அனுஸரித்து அனுஷ்டானத்திலிருந்து கோடி-தீர்த்தமே திரிஸ்கரிக்கப்பட்டது. இதனால் அந்த ஆர்யவகுப்பு ஜனங்கள் பலவித நிந்தனைகளுக்கும் கஷ்டங்களுக்கும் உள்ளானார்கள். இவர்களுக்கு ஸ்ரீ ஜக்தகுருக்களின் சாபம்

ராமேசுவரம் கோயில் தெற்கு கோபுர வாசல். எதிரிலிருந்தெடுத்த படம்

ராமேசுவரம் கோயில் மேலகோபுரவாசல். இதன் இருபுரத்திலும் வடக்கே மஹாகணபதி கோயிலும் தெற்கே பாலஸுப்ரஹ்மண்யர் கோயிலும் இருக்கிறது.

ஏற்பட்டுவிட்டதென்று இவர்களுடன் எல்லோரும் ஸம்வியவஹாரத்தைக் குறைத்துக் கொண்டார்கள். அவர்கள் புரோகிதம் செய்து வந்தவிடங்களிலும் அவர்களை விலக்கவாரம்பித்தார்கள். கோடிதீர்த்த வரும்படி தொலைந்ததுமல்லாமல் கோடிதீர்த்தமும் புழுபூச்சிகள் அடைந்து கெட்டுப்போய் உபயோகமற்ற நிலைமையில் வந்துவிட்டது. இப்படி வெகுகாலம் நடந்துவந்த பிறகு இரண்டாவது தடவை ஸ்ரீ மஹாஸ்வாமிகள் தக்ஷிணதேசயாத்திரையில் மதுரையில் இருக்கும் பொழுதே ராமேசுவர ஆர்ய சங்கத்தியவர் மதுரைக்குவந்து ஸ்ரீ ஸ்வாமிகளை வணங்கி தாங்கள் செய்த அபாரதத்தினால் தங்களுக்குண்டான கஷ்டநஷ்டங்களைத் தெரிவித்துக்கொண்டு தாங்கள் செய்த குற்றத்திற்கு தாங்கள் இதுவரையில் அனுபவித்த துஷ்டபலன் போதும், இனிமேலாவது தங்களை யனுக்ரஹித்துக் காப்பாற்ற வேண்டுமென்று வெகுவாய் வேண்டிக்கொண்டார்கள். ஸ்ரீ மஹாஸ்வாமிகளும் கருணையுடன் அவர்களுக்கு அபயம் கொடுத்து (1873ம் ஹு) ஸ்ரீமுக வருஷத்தில் இராமேசுவரத்துக்கு விஜயம் செய்தார்கள். தனுஷ்கோடி ஸ்நானம்செய்து முடித்து ஸ்ரீ ராமநாதருக்கு பூஜையும் கிரமமாய் ஸ்ரீ மஹாஸ்வாமிகளால் நடத்தப்பட்டபிறகு மற்ற தீர்த்தங்களில் ஸ்நானம்செய்து ஸர்வதீர்த்த ஸ்நானமும் செய்துகொண்டு ஸர்வதீர்த்தத்திலிருந்து தம் கமண்டுலுவில் தீர்த்தம் எடுத்துக்கொண்டு ஏற்கனவேஇரைத்து சுத்தப்படுத்திவைக்கப்பட்டிருந்த கோடிதீர்த்தத்துக்கு வந்து தம் கமண்டுலு தீர்த்தத்தை கோடிதீர்த்தத்தில் சேர்ப்பித்து இன்றுமுதல் இது ஸர்வ தீர்த்தமாகவே ஆய்விட்டது என்று தம் வாக்கினால் உச்சரித்து கோடிதீர்த்தத்திலிருந்து தம் பரிஜனங்களைக்கொண்டு தீர்த்தத்தை எடுப்பித்து தாம் ஸ்நானம்செய்து சிஷ்யஜனங்களையும் ஸ்நானம் செய்யும்படி ஆக்ஞை செய்தார்கள். அதுமுதல் இந்த கோடிதீர்த்தத்திற்கு முன்னிலும் அதிகமான மஹிமை உண்டாயிற்று.

அக்னிதீர்த்தம்.

லங்கையில் ராவணனை ஸம்ஹாரம் செய்துவிட்டு ஸீதையையுமழைத்துக்கொண்டு

எல்லோருடனும் திரும்பி ஸ்ரீராமானவர் கந்தமாதன பர்வதத்துக்கு வந்ததும் அவரை தர்சிக்கவந்த தண்டகாரண்ய வாஸிகளான மஹர்ஷிகளால் ராவணனைக் கொன்ற பிரம்மஹத்திதோஷ நிவாரணார்த்தம் சிவலிங்கப்பிரதிஷ்டை செய்யும்படி சொல்லப்பட்டபொழுது அக்கார்யத்தைச் செய்வதற்கு முன் ஸீதாதேவிக்கு ராக்ஷஸகிருஹத்தில் வெகு நாட்கள் தனிமையில் வஸித்ததால் ஏற்பட்டிருக்கும் தோஷத்தை நிவர்த்தித்து அவளை ஸஹதர்மசாரிணியாக கிரஹித்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாதலால் அவளை அக்னிபரிசுத்தையாகும்படி பிரேரணை செய்தார். அதற்காக அழைக்கப்பட்ட அக்னிபகவான் நேரில் வந்துஸீதாதேவி மிகவும் பரிசுத்தையானவளென்றும் அவளுடைய பதிவிரதா மாஹாத்மியத்தால்தான் ராவணாஸுரனை ஸ்ரீராமரால் வதம் செய்யமுடிந்ததென்றும் சொல்லி ஸீதையை ஸ்ரீராமரிடம் தானே கொடுத்துவிட்டு திரும்பவும் தான் வந்தவழியாகவே ஸ்ரீராமனாதர் ஸந்நிதியின் எதிர்பக்கத்தில் ஸமுத்திரத்திலிறங்கி மறைந்துவிட்டார். இவ்வாறு அக்னிபகவான் வந்து மறைந்தவிடம்தான் அக்னிதீர்த்தமென்று சொல்லப்படுவது.



அக்னிதீர்த்தம்

ஏகாந்த ராமேசுவரம்.

இது பாம்பனிலிருந்து ராமேசுவரத்துக்குப் போகும்வழியில் மங்களதீர்த்தத்துக்கு ஸமீபத்திலுள்ளது. வானரர்களால் ஸேதுவானது கட்டப்படுகையில் ஸ்ரீராமானவர் லக்ஷ்மணர் ஸுக்ரீவன் விபீஷணன் முதலியவர்களுடன் ராவணவதோபாயத்தைக் குறித்து ஏகாந்தத்தில் யோசனைசெய்வதற்காக இந்தவிடத்தில் வந்து உட்கார்ந்தார். யோசனை செய்யும்பொழுது பக்கத்திலுள்ள ஸமுத்திரத்தினாரவாரத்தால் ஒருவர் பேச்சு மற்றொருவருக்கு காதில்படாமல் போகவே அதைக்கண்டு சினங்கொண்டவராய் ஸ்ரீராமர் புருவத்தை நெறித்தார். ஏற்கனவே சூடுபட்டவனாதலால் ஸமுத்ராராஜன் இதைக்கண்டு பயந்து அந்த பிரதேசத்தில் தனது அலைகளைகளையெல்லாம் அடக்கி சப்தமில்லாமலிருந்தான். பிறகு இவர்கள் சப்தமில்லாமல் தனிமையில் யோசனைகளை செய்துமுடித்தார்கள். அதனால்தான் இதற்கு ஏகாந்த ராமேசுவரமென்று பெயர். இன்றும் இந்த பிரதேசத்தில் ஸமுத்திரத்தின் கொந்தளிப்பு மிகவும் ஸ்வல்பமாகவே காணப்படுகிறது. இந்தவிடத்திலுள்ள கோயில் தற்காலம் மிகவும் ஜீர்ணமாயிருக்கிறது.

அமிருதவாபிகா.

இந்த ஏகாந்த ராமேசுவரத்திலுள்ள கோவிலுக்குள் ஒரு கிணறு இருக்கிறது.

ஏகாந்த ராமேசுவரத்துக்கு சமீபத்தி லுள்ள வில்லூர்ணி.

அதுதான் அமிருதவாபிகையென்று சொல்லப்படும் தீர்த்தம். இதில் முன்னளில் ஈசுவரன் சொல்படி அகஸ்தியமஹர்ஷியுடைய ஸஹோதரர் மூன்றுவருஷகாலம் ஸ்நானம் செய்து அதனல் முக்தியடைந்ததாக புராணங்களில் சொல்லப்படுகிறது. இந்த ஏகாந்தராமேசுவரத்துக்கு ஸமீபத்திலுள்ள ஸமுத்திரக்கரையில் வில்லூர்ணியென்று ஒரு அதிசயம் இன்றும் காணப்படுகிறது. அதாவது நல்ல சுத்தமான தீர்த்தத்தை அபேக்ஷித்து ஸ்ரீராமரானவர் இங்கு ஸமுத்திரக்கரையில் அலைகளடிக்குமிடத்தில் தனது வில்லை பூமியில் ஊன்றினர். அதிலிருந்து ஒரு ஊத்து, உப்பில்லாத மதுரமான தீர்த்தம், பீரிட்டுக்கொண்டு வெளியிலடித்தது. இது இன்றும் அப்படியே காண்கிறது. ஸமுத்திரத்தின் அலைகளுக்கு நடுவில் இந்த ஒரு இடத்தில் மட்டும் நல்ல தீர்த்தம் ஒரு குழாய்க்குள்ளிருந்து வருவதுபோல் வருகிறது.

ஸ்ரீராமநாதர் கோயில் நந்தி.

ராமேசுவரம் கோயில் நந்திக்கு இருபக்கத்திலுமிருக்கும் ரத்னகரம் மஹோததிகளின் சிலைகளில் ஒன்று.

இந்த நந்தியானது மிகப்பெரிதான ஆகிருதியுள்ளதாய் வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு ஸ்ரீராமநாதர் தென்படாமல் மறைத்துக்கொண்டிருக்கிறது. இதற்கு இவ்வூரில் ஒரு ஐதிஹ்யம் சொல்லுகிறர்கள். முன்காலத்தில் ஒரு துலுக்க அரசன் பலாத்காரமாக கோயிலுக்குள் வந்ததாகவும் அப்பொழுது எவ்வளவு தடுத்தும் அவன் கேளாமல் நந்திக்கு ஸமீபத்தில் வரும்பொழுது நந்தியானது சிறிதாகவிருந்தது பெரிதாக வளர்ந்து ஸ்வாமியை அவனுக்குத் தெரியாமல் மறைத்துக்கொண்டதாகவும் அதைக்கண்டு அவன் சற்று தயங்கி இது கல்லு நந்திதானேயென்று கேட்க அங்குள்ளவர்கள் அது கல்லல்ல உயிருடன்கூடிய நந்தியென்று சொன்னதாகவும் அப்படியானல் தான் கொடுக்கும் புல்லை அது சாப்பிடுமாவென்று சொல்லி கொஞ்சம் புல்லை தருவித்து அதற்கு கொடுத்ததாகவும் நந்தியும் உடனே அதை சாப்பிட்டதாகவும் அதைக்கண்டு பயந்து அவ்வரசன் திரும்பிச் சென்றுவிட்டதாகவும் சொல்லுகிறர்கள். இன்றும் இந்த நந்தியின் வாயில் புல்லு காணப்படுகிறது. இந்த நந்திக்கு இரண்டு பக்கத்திலும் இரண்டு கற்சிலைகள் காண்கின்றன. அவை



ராமேசுவரம் கோயில் நந்தி.

கள் தாம் ரத்னாகரமும், மஹோததியும். இந்த இரண்டு ஸமுத்ரங்களும் புருஷாக்ருதியாய் வந்து இங்கு ஸ்ரீராமநாதரை தர்சிக்கிறார்கள்.

ஸேது மாதவர்.

முன்னொருகாலத்தில் பாண்டியநாட்டை குணநிதி யென்னுமோரரசன் ஆண்டுவந்தான். வயதான பிறகு அவன் தனது புத்ரனிடம் ராஜ்யத்தை ஒப்புவித்துவிட்டு தான் ஸம்ஸாரத்துடனும் பரிவாரத்துடனும் புறப்பட்டு ஒவ்வொரு க்ஷேத்ரமாகச்சென்று அங்கங்குள்ள தீர்த்தங்களில் ஸ்நானம்செய்து ஈசுவரனைப் பூஜித்து வந்தான். இவ்வாறு தேச ஸஞ்சாரம் செய்துவருகையில் ராமேசுவரம் வந்ததும் அங்கு அவனுக்கு மனதுக்கு ஆஹ்லாதகரமாயிருந்தமையால் அங்கேயே ஸ்திரமாய் வஸித்துக்கொண்டு தீர்த்தங்களில் ஸ்நானம் செய்துகொண்டு ஸ்ரீராமநாதரை பிரதிதினமும் தர்சித்துவந்தான். ஒருஸமயம் இவ்வா



ஸேதுமாதவர் கோயில்.

சன் மஹாவிஷ்ணுவைக்குறித்து யாகம்செய்தான். மஹாவிஷ்ணுவும் அவனிடம் மனமிரங்கி அவனை அநுக்ரஹிக்கவெண்ணங்கொண்டு லக்ஷ்மீதேவியுடன் பிரணயகலஹம் செய்தார். அவளும் மஹாவிஷ்ணுவினுடைய மனதை யறிந்தவளாய் அக்கலஹத்தை ஒரு விபாஜமாகக்கொண்டு பூமியில் மிகவும் ரூபலாவண்யமுள்ள எட்டுவயதுப் பெண்ணாக அவதரித்து தனுஷ்கோடியில் ஸமுத்ரக்கரையோரமாக மணலிலுட்கார்ந்து விளையாடிக்கொண்டிருந்தாள். அச்சமயம் அந்த குணநிதியென்னும் அரசன் பத்னியுடன் அங்குவந்து ஸ்நானதிகளை முடித்துக்கொண்டு கரையில் மணலில் விளையாடிக்கொண்டிருந்த பெண்ணைக் கண்டு அவளை நெருங்கி "நீயார், உனது பெற்றோர்கள் யார், நீ ஏன் இங்கு தனிமையிலிருக்கிறாய்" என்று கேட்டான். அதற்கு அப்பெண் "எனக்கு தாய்தகப்பனில்லை. நான் தனிமையிலிருக்கிறேன்" என்றாள். இதைக்கேட்டவரசன் மிகவும் வியந்து "அப்படியானால் நீ எங்கள் பின்னோடுவா. நாங்கள் உன்னை எங்களுடைய அருமைப்புதல்வியாக பாவித்து வளர்க்கிறோம்" என்றான். அதற்கு அப்பெண் "அப்படியே செய்கிறேன். ஆனால் ஒருவிஷயம். நான் எனக்கு இஷ்டமானவரைத்தான் கல்யாணம் செய்துகொள்வேன். அப்படிக்கில்லாமல் யாராவது என்னை பலாத்காரம் செய்தால் அவரை நீங்கள் தகுந்தபடி சிக்ஷிப்பதாயிருந்தால் நான் உங்களுடன் வருகிறேன்" என்றாள். அப்படியே செய்வதாக சொல்லி அவ்வரசன் அப்பெண்ணையுமழைத்துக்கொண்டு தன் பதனியுடனும் பரிவாரங்களுடனும் ராமேசுவரம்வந்து சேர்ந்தான். இவ்வாறு சிலகாலம் சென்றதும் ஸ்ரீ மாஹாவிஷ்ணுவானவர் லக்ஷ்மீதேவியின பிரிவைப் பொருக்கமாட்டாதவராய அவளைத்தேடிக்கொண்டு ஒவ்வொரு தேசமாய் ஸஞ்சரிக்கவாரம்பித்தார். கடைசியில் ராமேசுவரம்வந்து குணநிதி அரசனின் அரண்மனைத்தோட்டத்தில் லக்ஷ்மியானவள் புஷ்பம் பரித்துக்கொண்

டிருப்பதைக்கண்டார். உடனே தான் ஒரு வடதேசத்து பிராமணனாக உருமாறி விபூதிருத்ராக்ஷம் தரித்து கழுத்தில் ஒரு காவடியைத்தூக்கிக்கொண்டு அதன் இருபக்கத்திலும் இரண்டு பாத்திரங்களில் கங்காதீர்த்தத்தை நிரப்பிக்கொண்டு அத்தோட்டத்திற்குள் நுழைந்து அப்பெண்ணை கையைப் பிடித்திழுத்தார். அப்பெண்ணும் கூக்குரலிடவே உள்ளிருந்து அரசன் முதலியவர்கள் வந்து என்னவென்று கேட்க அப்பெண் அங்குள்ள வடதேசத்து பிராமணனைக்காட்டி அவன் தன் கையைப் பிடித்திழுத்ததாகச் சொன்னாள். உடனே அரசன் அந்தப்பிராமணனைப் பிடித்துவரச்சொல்லி விசாரித்ததில் தான் காசிவாஸியான மாதவனென்றும் ஸ்ரீராமநாதருக்கு அபிஷேகத்துக்காக காவடியில் கங்காதீர்த்தம் கொண்டுவந்ததாகவும் வழியில் இந்தப் பெண்ணைக் கண்டதும் அவள் தன் பத்னிமாதிரியாகத தோன்றியதால் அவள் கையைப்பிடித்தழைத்ததாகவும் சொன்னார். இதைக்கேட்டதும் அவ்வரசன் மிகச்சினங்கொண்டு அந்தபிராமணனை ஸ்ரீராமநாதர்கோயிலிலேயே பின்பக்கத்தில் ஓர்மண்டபத்தில் விலங்கிட்டுக் கட்டிவிட்டான். அன்றிரவு அவ்வரசனுக்கு ஸ்வப்னத்தில் தான்விலங்கிட்ட பிராமணன் ஸ்ரீமஹாவிஷ்ணுவென்றும் தனது பெண்ணாக வளர்த்துவருபவள் ஸாக்ஷாத் லக்ஷ்மீ தேவியென்றும் வியக்தமாக தென்பட்டது. உடனே எழுந்திருந்து வந்தபெண்ணைப் பார்த்தான். அவள் நிஜமாகவே லக்ஷ்மிதேவியின் சின்னங்களுடன் காணப்பட்டாள். உடனே அவளையுமழைத்துக்கொண்டு கோவிலுக்குச்சென்று அந்த வடதேசத்து பிராமணனைப் பார்த்தான். அவன் சங்குசக்ர கதாபாணியாய் ஆனால் கழுத்தில் காவடியும் காலில்விலங்குமாகக் காணப்பட்டான். இதைக்கண்டதும் அரசனானவன் ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான். தெரியாத்தன்மையால் செய்த அபராதத்தை க்ஷமித்துத் தன்னைக் காப்பாற்றவேண்டுமென்று பிரார்தித்தான். ஸ்ரீ மஹாவிஷ்ணுவும் மந்தஹாஸத்துடன் அவனுக்கு அபயங்கொடுத்து தாமும் லக்ஷ்மியுமாகச்சேர்ந்து அவனை அநுக்ரஹிப்பதற்காகவே அப்படி செய்ததாகவும், தாம் அந்த வேஷத்துடனேயே அவ்வூரில் ஸேதுமாதவர் என்று பெயருடன் தங்கியிருப்பதாகவும் எவரும் தம்மை தர்சித்துச் சென்றால்தான் அவர்களுக்குச்ஸேது யாத்ராபலன் வருமென்றும் அவ்வரசனுக்கு எல்லா

ராமேசுவரம் கோயில் வெள்ளிரதம்.

தனுஷ்கோடி துறைமுகம்—ஸிலோன் தீவிலிருந்துவந்த கப்பலொன்றும் ஷடி தீவுக்குப் போகும் கப்பலொன்றும் இருபக்கங்களிலும் காண்கின்றன.

ச்ரேயஸ்ஸுமுண்டாகுமென்றும் சொல்லி அந்தர்தியானமானார். லக்ஷ்மியும் அவ்வரசன் தன்னை அன்புடன் வளர்த்ததில் தான் மிகவும் ஈடுபட்டிருப்பதாகவும் அதனால் அவனை தான் எப்பொழுதும் கடாக்ஷிப்பதாகவும் சொல்லி தனதிருப்பிடமாகிய ஸேதுமாதவரின் வக்ஷஸ்தலத்தையடைந்தாள். அரசனும் தனதிருப்பிடம்சென்றான். இந்த ஸேதுமாதவர் ஸந்நிதி மிகவும் முக்கியமானது. இதை தர்சிக்காமல்சென்றால் யாத்திரையின்பலன் கிடையாதாகையால் எல்லோரும் கடைசியில் இவரை தர்சித்து பூஜித்துக்கொண்டுதான் புறப்படுவார்கள்.

தனுஷ்கோடி தீர்த்தம்.

ராவணவதமாய் திரும்பிய பிறகு விபீஷணரானவர் தனது ராஜ்யமாகிய லங்கைக்கு ஸ்ரீ ராமரால் ஸேதுவேற்பட்டுவிட்டதால் யாரும் இனி அங்கு ஸுலபமாய் வரக்கூடுமென்றும் லங்கையிலிருந்து ராக்ஷஸர்களும் ஸுலபமாய் இந்த பக்கம் பாதகண்டத்திற்கு வரக்கூடுமென்றும் அதனால் பரஸ்பரம் அதிக தொந்தரவுகள் ஏற்படுமாகையால் ஸேதுவை அழித்துவிட வேண்டுமென்றும் ஸ்ரீராமரைப் பிரார்த்தித்தார். ஸ்ரீராமரும் அதற்கிணங்கி தமது தனுஸ்ஸின் கோடியால் அந்த ஸேதுவை குறுக்கே கீறிப்பிளந்துவிட்டார். அதனால் தான் இந்த தீர்த்தத்திற்கு தனுஷ்கோடி தீர்த்தமென்று பெயர். இதையே தான் ஸம்ஸ்கிருதத்திலும்.

रामेण या कृता रेखा धनुषा क्षीरसागरे । मुक्तिस्तद्दर्शनादेव न जाने स्नानजं फलम् ॥



கந்தமாதன பர்வதத்தில் ஸ்ரீராமரின் பாதங்களிருக்கும் மண்டபம்.

என்று சொல்லுகிறார்கள். இதனால் அதுமுதல் லங்கைக்கு போக்குவரத்து இல்லாமல் போய்விட்டது. இந்த திர்த்தத்தின் மஹிமையைப்பற்றி ஏற்கனேவே சொல்லியிருக்கிறோம். இவ்விடத்தில் பர்வகாலங்களில் தான் ஸ்நானம் செய்யலாமென்ற நிர்ப்பந்தமில்லாமல் எப்பொழுதும் ஸ்நானம் செய்யலாம். இங்கிருந்து தான் ஸிலோன் தீவுக்கு பிரதி தினமும் கப்பல்கள் போய் வருகின்றன. கப்பல் துரைமுகமும் கப்பல்களும் படத்தில் காண்பிக்கப்பட்டிருக்கின்றன.

சிலாசாஸனம்.

இக்கோயிலில் பல சிலாசாஸனங்கள் சுவரில் வரையப்பட்டிருக்கின்றன. சகம் 1530—ல் விநாயகர் சந்நிதி, விசுவபூபதி காலத்தில் ராமநாதன் என்பவரால் பழுது பார்க்கப் பட்டதாம். பள்ளியறையிலுள்ள வெள்ளிக் கட்டில் விஜயரகுநாத சேதுபதி காத்த தேவரால் செய்து வைக்கப்பட்டதாம். த்வஜஸ்தம்பம் பர்வதவர்த்திநி அம்மன் ஸந்நிதியிலுள்ளது. சகம் 1300—ல் செய்து வைக்கப்பட்டது. முதல் பிராகாரம் சகம் 1545-ல் கட்டி வைக்கப்பட்டதாம். மதுரை சமஸ்தான வீரப்ப நாயக்கரால் சகம் 1530 (கி-பி. 1609, 23)ல் ராமநாதர் ஸந்நிதி புதுப்பிக்கப்பட்டதாம். செப்புப் பட்டய சாசனங்களிலிருந்து சகம் 1635-ல் முத்து விஜய ரெகுநாத சேதுபதி காத்த தேவர் ஹிரண்ய கர்ப்பாதானம் செய்து அத்தனத்தைக்கொண்டு 14 பிராம்மணர்களுக்கு அத்தியுட்டு கிராமத்தை பங்கிட்டுக் கொடுத்தாராம். நவராத்திரி உத்ஸவம் செய்துவைக்க சகம் 1580-ல் சங்கா குருக்கள் முதலியவர்களுக்குப் பொருள் கொடுக்கப்பட்டது.

கோயிலின் பெருமை.

இங்குள்ள கோயிலுக்கு ஐந்து பிராகாரங்கள் உண்டு. முன் சுண்ணாம்புக் கற்களி



கந்தமதான பர்வதத்தில் ஸ்ரீராமரின் பாதங்களிருக்கும் மண்டபம்.
சமீபத்திலிருந்து எடுத்த படம்.

னால் கட்டப்பட்டிருந்த சுவர்கள் இப்பொழுது கறுப்புக் கற்களைக்கொண்டு புதிப்பிக்கப் பட்டிருக்கக் காணலாம். ஸ்ரீராமநாதசுவாமி கர்பபக்கிருஹத்தின் மேலுள்ள விமானம் முழுமையும் கருங்கல்லால் செய்விக்கப்பட்டு வெளிப்புறமுள்ள பிம்பங்கள் சுதையால் மூடப்பட்டிருக்கின்றன.

இவ்விடத்தில் முன்னரே கூறியுள்ளவாறு ஸ்ரீராமரும் ஹநுமாரும் மாத்திரமேயன்றி, ஸீதாதேவி, லக்ஷ்மணர், சுக்கிரீவன், "ஸேது" வென்ற அணையைக் கட்டிமுடித்த நளன், அங்கதன், நீலன், ஜாம்பவான், விபீஷணர் முதலானோர்கள் கூட சிவலிங்கங்கள் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள்.

இங்கு மிகவும் விசேஷமானது அழகிய நீண்ட கல்தூண் மண்டபங்களே. தவிர கோயில் கட்டியோ அல்லது மானியம் முதலியன ஏற்படுத்தியோ உதவிபுரிந்த பற்பல ஸேதுபதிகளது சிலைகளும் இங்கு வைக்கப்பட்டிருத்தல் இன்னொரு விசேஷம். கோயிலுக்கு மஹிமையே "சொக்கட்டான்" எனப்படும் இம்மண்டபங்களால். இவைகள் சுமார் நாலாயிரம் அடி நீளமும், பதினேழு முதல் இருபத்தொரு அடிவரையில் அகலமும், முப்பதடி உயரமும் ஏற்பட்டிருக்கின்றன. நிருருதிமூலையில் இந்தப்பிராகாரத்தில்தான் சிருங்ககிரி ஸ்வாமிகளுக்கு இவ்வூருக்கு விஜயம் செய்யும்பொழுதெல்லாம் ஜாகையேற்படுத்துகிற வழக்கம். பிராகாரச் சுவர்களிலும், மண்டபங்களின் தூண்களிலும் ஏற்பட்டிருக்கும் ஸேதுபதிகள் என்ற ராமநாதபுர ராஜாக்களின் சிலைகள் திருப்பணி செய்வித்தவர்களுடையனவே.



கந்தமாதன பர்வதத்தில் காணப்படும் அரண்மனையிருந்த சின்னங்கள்.

சரித்திர ஸம்பந்தமான விஷயம்.

பாண்டிநாட்டின் இராஜ்யாதிபத்தியத்தைப்பற்றிப் பன்னிரண்டாம் நூற்றாண்டில் குலசேகரபாண்டியனுக்கும், பராக்கிரம பாண்டியனுக்கும் பலத்த விவாதம் நேரிட்டது. இது காரணமாக குலசேகரன் பராக்கிரமனை மதுரையில் படைகூட்டி போர் தொடுத்தனன். பராக்கிரமன் தனக்குள்ள படைக்குறைவையும், துணைக்குறைவையும் குறித்து தனக்கு மிக்க ஆப்தனான சிங்கள தேசமன்னனான பராக்கிரம பாகுவுக்குத் தூதுபோக்கி படைத்துணை யனுப்புமாறு வேண்டினன். அம்மன்னன் தனது தளகர்த்தனான இலங்காபுர தண்டநாயகனை பாண்டிநாடு வரைசென்று பராக்கிரமனுக்குப் படைத்துணையாயிருந்து சௌரியங்காட்டி வெற்றிக் கொடி நாட்டுமாறு அனுப்பினான். அங்ஙனம் அத்தளகர்த்தன் இலங்கையினின்றும் மதுரை வருமுன்னரே பராக்கிரமன் குலசேகரனால் போர்க்களத்தில் அவன் மனைவிமாருடன் கொல்லப்பட்டு பராக்கிரமனது மதுரையும் அவனது சிம்மாசனமும் கைப்பற்றப்பட்டன. இதையறிந்த இலங்கை தண்டநாயகன் மிகவருந்தி தனது அரசனுக்கு இவ்விவரங்களை தெளிவுபட அறிவித்தனன். அஃதறிந்த சிங்கள மன்னன் மிகச்சினந்து தனது தண்டநாயகனுக்கு, குலசேகரனை விடாது உனது முழுபலத்தையும், போர்த்திறமையையுங்காட்டி வென்று சிறைசெய்து அவன் கைப்பற்றிய மதுரைநாட்டையும் அரியாசனத்தையும் மீட்டு வெற்றி புரியுமாறு கண்டிப்பான ஆணையிட்டனன். அவ்வுத்திரவுபெற்ற தண்டநாயகன் குலசேகரன் மீது மிகக்கோபிதது அவனை வெற்றிபுரியும் வகைக்கான ஏற்பாடுகளையெல்லாம் திறமையாகச் செய்துகொண்டு குலசேகரனுக்குரிய இராமேசுவரத்தை முதலில் பிடித்துக்கொண்டனன்.

அல்லாமல், இராமேச்சுரத்திலிருந்து நான்கு குரோச தூரத்திலுள்ள "குந்துகாலம்"(?) எனப்படும் ஊரையும் கைப்பற்றி அவ்விடததில் கொல்லப்பட்ட மதுரை மன்னன் பராக்கிரமன் பெயரால் "பாரிக்கிரமபுரம்"(?) எனப்பெயரிட்டு அவ்விடத்தில் அடையாளத்திற்காக ஓர் கோட்டையும் கட்டசசெய்தனன். இச்செய்தி "மீகாவமிசம்" எனப்ப

டும் சிங்கள தேசசரித்திரத்தில் காணப்படுகிறது. இங்ஙனம் பகைவனுய் இராமேச்சுர மும், குந்துகாலமும் பிடிபட்டதை யுணர்ந்த குலசேகரன் கோபித்தெழுந்து திரண்ட படை திரட்டி தனது இருபுதல்வர்களை போர் புரியுமாறு அனுப்பினன். கடும்போர் நிகழ்ந்தது. முடிவில் இலங்கை தண்டநாயகனுல் அவர்கள் தோற்கடிக்கபபட்டனர். பின்னர் தானே தனது சைந்நியங்களுடன் போர்க்கெழுந்து மாற்றானது போர்வன்மைக் காற்ருது புறமுதுகாட்டி இடமறியாது மறைந்தோடினன்.

இச்சமயத்தில் தான் தேவிபட்டணமும் நாசம் செய்யப்பட்டது. இங்ஙனம் குலசேகரனுக்குரிய பலவூர்களையும் தண்டநாயகன் கைப்பற்றிக்கொண்டு கடைசியாக மதுரைவந்து சேர்ந்தனன். தனது தகப்பன் பராக்கிரம பாண்டியன் பகைவரால் கொல்லப் பட்டபின் அந்நாட்டிலிருக்கப் பயநது "மலய தேசம்" சென்றிருந்த வீரபாண்டியனை பய மின்றி மதுரை வருமாறுசெய்து அவனுக்கு அவனது தந்தை பாரிககிரம பாண்டியனது திருமுடிசூடி அரியாசனத்தில் எழுந்தருளுவித்தனன். அவ்வளவில் அந்நன்றி பாராட்டி இலங்கை தண்டநாயகனுக்கு மிகமரியாதைசெய்து அன்பு காட்டினன்.

இங்ஙனம் நிகழ்ந்த செய்தியை ஓடிப்போன குலசேகரன் உணர்ந்து மீண்டும் போர்புரிய நினைந்து தனக்கு உதவிப்படைகளும், துணைச்சேவர்களும், அனுப்பும்படி தனக்குவேண்டிய திருநெல்வேலி, கொங்கு நாடுகளிலுள்ள அதிபதிகளை வேண்ட, அவர் களும், போதுமான படைகளும் படைவீரர்களையும் அனுப்பினன். இஃதறிந்த இலங்கை மன்னன் தனது இலங்கை தண்டநாயகனுக்கு உதவிக்காகப் போர்த்திறமையில் வல்ல "ஜகத்விஜயன்" என்பவனையும் யுதத சன்னதப்படுத்தியனுப்ப, அவனும் உரியகாலததில் வந்துசேர்ந்து பெருமபோர் நிகழ்த்தினர். இரண்டாமுறையும குலசேகரன் நன்ருகத் தோற்கடிககப்பட்டு தொண்டமான் காட்டில்சென்று மறைந்துகொண்டனன். இவ்வி ரண்டாம் வெற்றி மதுரையில் வெகு பிரசித்தமாக்கப்பட்டது. வீரபாண்டியனே ஸ்திர மான அரசனுய் சிம்மாசனத்து வீற்றிருநதனன். ஆயின், தேசததில் குழபபமும கல வரமுமாயிருந்தன. இஃதுணர்நத இலஙகை தண்டநாயகன் திருப்பத்தூர்சென்று அங் குள்ள கலகக்காரர்களை எதிர்த்து அடக்கியும், பொன்னமார் பதியிலுள்ள குலசேகரனது அரண்மனையை அழித்தும், கலகமும் குழப்படும் உண்டாகாதவாறு தக்கபடி ஏற்பாடு செய்தனன். வீரபாண்டியனும நிரந்தர அரசனுகவே யிருந்து அரசுபுரிந்து வந்தனன்.

இவ்வண்ணம் நேரிட்டதும் குலசேகரன் தொண்டைமானிடம் தஞ்சம் புகுந்து ஒத்தாசையை வேண்டினன். அந்த ஸமயத்தில்தான் சோழமன்னனுக்கும் குலசேகரன் அவரது சைன்னியத்தின் உதவியைவேண்டி மனுசெய்துகொண்டது. அந்தப்படி இரண் டாவது ராஜாதிராஜன் சோழமன்னன் தமது பன்னிரண்டாம் ஆணடில் குலசேகரனுக்கு தமது சைந்நியததை அனுப்பியதுமனனியில் அதில் முதன்மைபெற்ற அதிகாரிக்கு வரி நீககி பூமியும தானம் செய்துளன். இதின் விவரம மாயவரம் தாலுகா திருக்கடையூரி லுள்ள கோயில் சிலாசாஸனத்தில் தெரிவிக்கப்பட்டுளது.

இங்ஙனம் தொண்டமான் காட்டில் ஒளிந்து பின் அவன் நாட்டையடைந்து அவன் ஆதரவை எதிர்பார்த்து யாதொருபயனும் அடையாத குலசேகரன் மெள்ள சோழ

மன்னன் உதவிபெற அவன் நாடுசார்ந்து தனது கருத்தை வெளியிட்டனன். சோழன் அவனது ஆபத்திற்கு வருந்தி உதவிபுரிவதாக வாக்களித்ததுமன்றி. பல்லவ அதிபதி யொருவன் அபிமானத்தையும் குலசேகரன் அடையும்படி உதவிபுரிந்தனன். இவ்விதம் சோழ பல்லவர்களின் ஆதரவு பெற்ற குலசேகரன் படைதிரட்டி மூன்றுமுறை வீரபாண்டியனை எதிர்த்தும் ஜயம் பெற்றானில்லை. இங்ஙனம் மும்முறையும் தோல்வியுற்றது கண்ட இலங்கை தண்டநாயகர்களிருவரும் பகைவனால் வீரபாண்டியனுக்கு யாதோர் இடையூறும் நேராதென்றெண்ணி அவனிடம் விடைபெற்று சிங்கள சைந்நியங்களுடன் தங்கள் இலங்கை சென்றனர்.

இவ்வாறு பராக்கிரமபாகு பாண்டிநாடு வந்து ஜயம்பெற்றதை ஞாபகார்த்தமாக ராமேசுரம் இராமநாதசுவாமி கோயில் கர்ப்பகிருகத்தின் மதில் சுவர் அடிமுதல் நுனிவரையும் தனது இலங்கையிருந்தே கருங்கல் கொண்டுவரச்செய்து கட்டிவைத்ததாக அறியப்படுகிறது. அக்கருப்பக்கிருகமே இன்றும் அழியாது விளங்கிக்கொண்டிருக்கிறது. இதுவன்றி "சுஹாபரணம்" என்னும் நாணயமும், இம்மன்னனது பிம்பத்துடன் பாண்டிய நாட்டில் வழங்கப்பட்டதாகவும் பண்டுவிஜயகம்(?) எனப்படும் கிராமத்தையும் நிர்மாணஞ் செய்து அதைப் பிராம்மணர்களுக்குத் தானம் செய்ததாகவும் தெரிகிறது.

இலங்கை பராக்கிரம பாகுவின் பாண்டிநாட்டுச் சண்டையில் சேதப்பட்ட பிரதான இடங்கள் தஞ்சாவூர் ஜில்லா பட்டுக்கோட்டைத் தாலூகா 'மணமேல்குடி' அதன் சமீபமுள்ள 'மஞ்சகுடி, தொண்டி, தேவிபட்டணம், மானாமதுரை, நெட்டூர், ஸ்ரீவில்லிப்புத்தூர், வேலங்குடி, திருப்பத்தூர், விக்கிரமமங்கலம்' முதலியன.

தென்னிந்தியா சரித்திர சம்பந்தமான விஷயம் சில சரித்திர சம்பந்தமன்றி சிலா சாஸனங்களாலும் உறுதிப்படுகின்றன. காஞ்சிபுரம் தாலூகா ஆரம்பாக்கம் கோயிலிலுள்ள அடியிற்கண்ட சாஸனத்தில் பாண்டிநாட்டில் ஏற்பட்ட கலகமும், அதன் நிமித்தம் ராஜாதிராஜ தேவமன்னர் சுவாமியிடம் 28நாள் பிரார்த்தித்ததும், தனது தளகர்த்தன் பல்லவராயனை அனுப்பி தேசத்தில் கலகம் நடக்காதபடி பாதுகாக்கச்செய்த செய்தியும விளக்கமாக விவரிக்கப்பட்டிருக்கிறது. இஃதன்றி அக்காலத்தில் வங்காளதேசத்திலுள்ள கௌட நாட்டிலிருந்து இத்தென்னிந்தியா விஜயம் செய்திருந்த "உமாபதிதேவர்" எனப்படும் ஞானசிவ தேவரை அரசன் இப்பாண்டிநாட்டுக் கலகம் அடங்கவேண்டிய ஜபம் செய்யசசொல்ல, அம்மகான் அப்படியே ஜபமசெய்ய கலகம் அடங்கிவிட்டதாகவும், அது நிமித்தம் ஆரம்பாக்கம் (ஆல்பாக்கம) கிராமத்தில் பிராம்மணர்களுக்குப் பல தானம் செய்தவிஷயம் விளக்கமாகிறது.

———

தேவாரப்பாடல்கள்.

திருஞானஸம்பந்தர் பாடியது :—

மூன்றாம் திருமுறை—பண்—காந்தாரபஞ்சமம்.

அலைவளர்தண்மதியோடயலேயடக்கியுமை
முலைவளர்பாகமுயங்கவல்லமுதல்வன்முனி
யிலைவளர்தாழைகள்விம்முகானவிராமேச்சரந்
தலைவளர்கோலநன்மாலையன்றானிருந்தாட்சியே. 1

தேவியைவவ்வியதென்னிலங்கைத்தசமாமுகன்
பூவியலும்முடிபொன்றுவித்தபழிபோயற
வேவியலுஞ்சிலையண்ணல்செய்தவிராமேச்சர
மேவியசிந்தையினார்கடம்மேல்வினைவீடுமே. 2

மானனோக்கிவைதேகிதன்னையொருமாயையாற்
கானதில்வவ்வியகாரரக்கன்னுயிர்செற்றவ
னீனமில்லாப்புகழண்ணல்செய்தவிராமேச்சர
ஞானமுநன்பொருளாகிநின்றதொருநன்மையே 3

உரையுணராதவன்சாமமென்னுமுறுவேட்கையான்
வரைபொருதோளிறச்செற்றவில்லிமகிழ்ந்தேத்திய
விரைமருவுங்கடலோதமல்குமிராமேச்சரத்
தரையரவாடநின்றாடல்பேணுமம்மானல்லனே. 4

ஊறுடைவெண்டலைகையிலேந்திப்பலவூர்தொறும்
வீறுடைமங்கையரையம்பெய்யவிறலார்ந்ததோ
ரேறுடைவெல்கொடியெந்தைமேயவிராமேச்சரம்
பேறுடையான்பெயரேத்துமாந்தர்பிணிபேருமே. 5

அணையலைசூழ்கடலன்றடைத்துவழிசெய்தவன்
பணையிலங்குமுடிபத்திறுத்தபழிபோக்கிய
வினையிலியென்றுமிருந்தகோயிலிராமேச்சரந்
துணையிலிதூமலர்ப்பாதமேத்தத்துயர்நீங்குமே. 6

சனிபுதன்ஞாயிறுவெள்ளிதிங்கட்பலதீயன
முனிவன்செய்துகந்தானைவென்றவ்வினைமூடிட
வினியருணல்கிடென்றண்ணல்செய்தவிராமேச்சரம்
பனிமதிசூடிநின்றாடவல்லபரமேட்டியே. 7

பெருவரையன்றெடுத்தேந்தினான்றன்பெயர்சாய்கெட
வருவரையாலடர்த்தன்றுநல்கியயன்மாலெனு

மிருவருநாடிநின்றேத்துகோயிலிராமேச்சரத்
தொருவனுமேபலவாகிநின்றதொருவண்ணமே. 8,9

சாக்கியர்வன்சமண்கையர்மெய்யிற்றடுமாற்றத்தார்
வாக்கியலும்முறைபற்றுவிட்டுமதிலொண்மையா
லேக்கியலுஞ்சிலைபண்ணல்செய் தவிராமேச்சரா
மாக்கியசெல்வனையேத்திவாழ்மின்னருளாகவே. 10

பகலவன்மீதியங்காமைக்காத்தபதியோன்றனை
யிகலழிவித்தவனேத்துகோயிலிராமேச்சரம்
புகலியுண்ஞானசம்பந்தன்சொன்னதமிழ்புந்தியா
லகலிடமெங்குநின்றேத்தவல்லார்க்கில்லையல்லலே. 11

மூன்றும் திருமுறை—பண்—பழம்பஞ்சரம்.

திரிதருமாமணிநாகமாடத்திளைத்தொருதீயழல்வாய்
நரிகதிக்கவெரியேந்தியாடுநலமேதெரிந்துணர்வா
ரெரிகதிர்முத்தமிலங்குகானலிராமேச்சரமேய
விரிகதிர்வெண்பிறைமல்குசென்னிவிமலர்செயுஞ்செயலே. 1

பொறிகிளர்பாம்பரையார்த்தயலேபுரிவோடுமைபாடத்
தெறிகிளரப்பெயர்ந்தெல்லியாடுந்திறமேதெரிந்துணர்வா
ரெறிகிளர்வெண்டிரைவந்துபேருமிராமேச்சரமேய
மறிகிளர்மான்மழுப்புல்குகையெம்மணாளர்செயுஞ்செயலே. 2

அலைவளர்தண்புனல்வார்சடைமேலடக்கியொருபாக
மலைவளர்காதலிபாடவாடிமயக்காவருமாட்சி
யிலைவளர்தாழைமுகிழ்விரியுமிராமேச்சரமேயார்
தலைவளர்கோலநன்மாலைசூடுந்தலைவர்செயுஞ்செயலே. 3

மாதெனநேரிழையேர்தடங்கண்மலையான்மகள்பாடத்
தேதெரியங்கையிலேந்தியாடுந்திலமேதெரிந்துணர்வா
ரேதமிலார்தொழுதேத்திவாழ்த்துமிராமேச்சரமேயார்
போதுவெண்டிங்கள்பைங்கொன்றைசூடும்புனிதர்செயுஞ்செயலே 4

சூலமோடொண்மழுநின்றிலங்கச்சுடுகாடிடமாகக்
கோலநன்மாதுடன்பாடவாடுங்குணமேகுறித்துணர்வா
ரேலநறும்பொழில்வண்டுபாடுமிராமேச்சரமேய
நீலமார்கண்டமுடையவெங்கணிமலர்செயுஞ்செயலே. 5

கணைபிணைவெஞ்சிலைகையிலேந்திக்காமனைக்காய்ந்தவர்தா
பிணைபிணைநோக்கிநல்லாளோடாடுமியல்பினராகினல்ல
விணைமலர்மேலனம்வைகுகானலிராமேச்சரமேயா
ரணைபிணைபுல்குகாந்தைசூடுமடிகள்செயுஞ்செயலே. 6

நீரினார்புன்சடைபின்புதாழநெடுவெண்மதிசூடி
யூரினார்துஞ்சிருள்பாடியாடுமுவகைதெரிந்துணர்வா
ரேரினார்பைம்பொழில்வண்டுபாடுமிராமேசசரமேய
காரினார்கொன்றைவெண்டிங்கள்சூடுங்கடவுள்செயுஞ்செயலே. 7

பொன்றிகழ்சுண்ணவெண்ணீறுபூசிப்புலித்தோலுடையாக
மின்றிகழ்சோதியர்பாடலாடன்மிக்கார்வருமாட்சி
யென்றுநல்லோர்கள்பரவியேத்துமிராமேச்சரமேயார்
குன்றினாலன்றரக்கன்றடந்தோளடர்த்தார்கொளுங்கொள்கையே. 8

கோவலனான்முகனைக்கொணாதகுழகனழகாய
மேவலனொள்ளெரியேந்தியாடுமிமையோரிறைமெய்ம்மை
யேவலனார்புகழ்ந்தேத்திவாழ்த்துமிராமேச்சரமேய
சேவலவெல்கொடியேந்துகொள்கையெம்மிறைவர்செயுஞ்செயலே. 9

பின்னொடுமுன்னிடுதட்டைசாத்திப்பிரட்டேதிரிவாரும்
பொன்னெடுஞ்சீவரப்போர்வையார்கள்புறங்கூறல்கேளாதே
யின்னெடுஞ்சோலைவண்டியாழ்முரலுமிராமேச்சரமேய
பன்னெடுவெண்டலைகொண்டுழலும்பரமர்செயுஞ்செயலே. 10

தேவியைவவ்வியதென்னிலங்கையரைமன்றிறல்வாட்டி
யேவியல்வெஞ்சிலையண்ணனண்ணுமிராமேச்சரத்தாரை
நாவியன்ஞானசம்பந்தனல்லமொழியானவின்றேத்தும்
பாவியன்மாலைவல்லாரவர்தம்வினையாயினபற்றறுமே. 11

திருநாவுக்கரசு சுவாமிகள் பாடியது :—

நான்காம் திருமுறை—திருநேரிசை.

பாசமுங்கழிக்ககில்லாவரக்கரைப்படுத்துத்தக்க
வாசமிக்கலர்கள்கொண்டுமதியினான்மால்செய்கோயில்
நேசமிக்கன்பிலேநினைமினீர்நின்றுநாளுந்
தேசமிக்கானிருந்ததிருவிராமேச்சுரமே. 1

முற்றினநாள்களென்றுமுடிப்பதேகாரணமா
யுற்றவன்போர்களாலேயுணர்விலாவரக்கர்தம்மைச்
செற்றமால்செய்தகோயிறிருவிரமேச்சுரத்தைப்
பற்றிநீபரவுநெஞ்சேபடர்சடையீசன்பாலே. 2

கடலிடைமலைகடம்மாலடைத்துமால்கருமமுற்றித்
திடலிடைச்செய்தகோயிற்றிருவிராமேச்சுரத்தைத்
தொடலிடைவைத்துநாவிற்சுழல்கின்றேன்றூய்மையின்றி
யுடலிடைநின்றும்பேராவைவராட்டுண்டுநானே. 3

குன்றுபோற்றோளுடையகுணமிலாவரக்கர்தம்மைக்
கொன்றுபோராழியம்மால்வேட்கையாற்செய்தகோயில்
னன்றுபோல்னெஞ்சமேநீநன்மையையறிதியாயிற்
சென்றுநீதொழுதுய்கண்டாய்திருவிராமேச்சுரமே. 4

வீரமிக்கெயிறுகாட்டிவிண்ணுறநீண்டரக்கன்
கூரமிக்கவனைச்சென்றுகொன்றுடன்கடற்படுத்துத்
தீரமிக்கானிருந்ததிருவிராமேச்சுரத்தைக்
கோரமிக்கார்தவத்தாற்கூடுவார்குறிப்புளாரே. 5

ஆர்வலநம்மின்மிக்காரென்றவவ்வரக்கர்கூடிப்
போர்வலஞ்செய்துமிக்குப்பொருதவர்தம்மைவீட்டித்
தேர்வலஞ்செற்றமால்செய்திருவிராமேச்சுரத்தைச்
சேர்மடநெஞ்சமேநீசெஞ்சடையெந்தைபாலே. 6

வாக்கினாலின்புரைத்துவாழ்கிலார்தம்மையெல்லாம்
போக்கினாற்புடைத்தவர்களுயிர்தனையுண்டுமால்தான்
றேக்குநீர்செய்தகோயிறிருவிராமேச்சுரத்தை
நோக்கினால்வணங்குவார்க்குநோய்வினைநணுகுமன்றே. 7

பலவுநாடீமைசெய்துபார்தன்மேற்குழுமிவந்து
கொலைவிலார்கொடியராயவரக்கரைகொன்றுவீழ்த்த
சிலையினான்செய்தகோயிற்றிருவிராமேச்சுரத்தைத்
தலையினால்வணங்குவார்கள்தாழ்வராந்தவமதாமே. 8

கோடிமாதவங்கள்செய்துகுன்றினார்தம்மையெல்லாம்
வீடவேசக்கரத்தாலெரிந்துபின்னன்புகொண்டு
தேடிமால்செய்தகோயிறிருவிராமேச்சுரத்தை
நாடிவாழ்நெஞ்சமேநீநன்னெறியாகுமன்றே. 9

வன்கண்ணர்வாளரக்கர்வாழ்வினையொன்றறியார்
புன்கண்ணராகிநின்றுபோர்கள்செய்தாரைமாட்டிச்
செங்கண்மால்செய்தகோயிறிருவிராமேச்சுரத்தைத்
தங்கணாலெய்தவல்லார்தாழ்வராந்தலைவன்பாலே. 10

வரைகளொத்தேயுயர்ந்தமணிமுடியரக்கர்கோனை
விரையமுற்றறவொடுக்கிமீண்டுமால்செய்தகோயில்
றிரைகள்முத்தால்வணங்குந்திருவிராமேச்சுரத்தை
யுரைகள்பத்தாலுரைப்பாருள்குவாரன்பினாலே. 11



உத்தரகோசமங்கை கோயில் கோபுரம்.

உத்தரகோசமங்கை.

உத்தரகோசமங்கை எனப்படும் க்ஷேத்திரம் ராமனாதபுரத்திற்கு மேற்கில் சுமார் எட்டுமைல் தூரத்திலுள்ளது. இவ்விடம் கோயிலில் ஸ்ரீ நடராஜ மூர்த்தி கற்சிலையில் அமைக்கப்பட்டுள்ள பெருமைபற்றி இவ்விடத்திற்கு ஆதிசிதம்பரம் எனவும் பெயருண்டு.

மாணிக்கவாசகர் பாடியது.

மாணிக்கவாசக சுவாமிகள் ஆவுடையார் கோவிலில் (திருப்பெருந்துறை) ஈசுவரனிடம் உபதேசம் பெற்றதும் பகவான் அந்தர்த்தானமான ஏக்கத்தினால் பலவிடங்கள் சென்று கடைசியில் இவ்விடம் வந்து தங்கி ஆறுதலடைந்தனர். இவர் பாடிய திருவாசகப்பாடல்களை கடைசியில் பதிப்பித்திருக்கிறோம்.

கைலாஸ பாவனை.

ஸ்ரீ நடராஜமூர்த்தி மண்டபத்தின் மேற்கில் கைலாஸ மலைபோல ஒரு உயர்ந்த மேடை ஏற்படுத்தப்பட்டுளது. இது வெளிப்பிராகாரத்தின் வடமேற்கு மூலையிலுள்ளது. இதில் பார்வதி, பரமேசுவரன், ஸ்ரீ மாணிக்கவாசகர் இவர்களது பிம்பங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

பலர் பூஜித்துளது.

இவ்விடம் மூர்த்தியை பிருகுமஹரிஷி, சாண்டில்லிய ரிஷி, கங்காதேவி, அக்னி இவர்களும் பூஜித்து பெருமை யடைந்துளர்.



திருப்புல்லாணி (தர்ப்பசயனம்) கோயில் கோபுரம்.

தர்ப்பசயனம்.

இந்த க்ஷேத்திரமானது ராமநாதபுரம் ரெயில்வேஸ்டேஷனிலிருந்து எழுமைல் தூரத்தில் இருக்கிறது. இவ்விடத்தில்தான் ஸ்ரீராமானவர் மூன்றுநாள் தர்ப்பத்தின்பேரில் சயநித்துக்கொண்டு ஸமுத்திராஜனை தியானம்செய்து அழைத்தது. அவ்வாசன் வாராமையால் அவன்பேரில் கோபங்கொண்டு தனதுபாணத்தால் ஸமுத்திரத்தை வற்ற அடிக்க ஆரம்பித்தது இந்தவிடம்தான். உடனே ஸமுத்திராஜன் பயந்து, நடுநடுங்கி, ஓடோடியும்வந்து தான்செய்த குற்றத்தை க்ஷமித்தருளவேண்டுமென்று கேட்டுக்கொள்ள அவனை அனுக்ரஹித்த இடம் இதுதான். இந்த தர்ப்பசயநத்தைத்தான் திருப்புல்லாணிஎன்று சொல்வார்கள். இந்தக்ஷேத்ரத்துக்கு புல்லாரண்யக்ஷேத்ரம் என்று பெயர். இங்கு ஹோமதீர்த்தம்என்றும் சக்ரதீர்த்தமென்றும் இரண்டு தீர்த்தங்கள் இருக்கின்றன. சக்ரதீர்த்தத்தின்மஹிமை ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். ஸ்தல விருக்ஷம் அச்வத்தம். ஸ்வாமிபெயர் ஜகன்னாதன். கிழக்கே திருமுக மண்டலம். நாச்சியார்பெயர் கல்யாணவல்லி. ராமேசுவரயாத்திரை செய்பவர்கள் இங்குவந்து தர்சனம்செய்துகொண்டுதான் ராமேசுவரம் செல்லவேண்டும்.

ஆழ்வாராதிகள் பாடிய பாடல்கள்.

திருமங்கையாழ்வார் பாடியது:—பெரிய திருமொழி.

கலிநிலைத்துறை. (சங்கராபரணராகம் - ரூபகதாளம்.)

¶ தன்னைநைவிக்கிலேன் வல்வினையேன்தொழுதும்எழு
பொன்னைநைவிக்கும்அப்பூஞ்செருந்தி மணநீழல்வாய்
என்னைநைவித்து எழில்கொண்டகன்றபெருமானிடம்
புன்னைமுத்தம்பொழில்சூழ்ந்து அழகாயபுல்லாணியே. 1

உருகிநெஞ்சே! கனைந்துஇங்குஇருந்தென்? தொழுதும்எழு
முருகுவண்டுண்மலர்க்கைதையின் நீழலின்முன்னொருநாள்
பெருகுகாதன்மை என்னுள்ளமெய்தப்பிரிந்தானிடம்
பொருதுமுந்நீர்க்கரைக்கே மணியுந்துபுல்லாணியே. 2

ஏதுசெய்தால்மறக்கேன்? மனமே! தொழுதும் எழு
தாதுமல்குதடம்சூழ்பொழில் தாழ்வர்தொடர்ந்து * பின்
பேதைநின்னைப்பிரியேன் இனிஎன்றுஅகன்றானிடம்
போதுநாளும்கமழும் பொழில்சூழ்ந்தபுல்லாணியே. 3

கொங்குண்வண்டேகரியாகவந்தான் கொடியேற்கு * முன்
நங்களீசன் நமக்கேபணித்தமொழிசெய்திலன்
மங்கைநல்லாய்! தொழுதுமஎழு போய்அவன்மன்னுமூர்
பொங்குமுந்நீர்க்கரைக்கே மணியுந்துபுல்லாணியே 4

உணரில்உள்ளம்சுடுமால் வினையேன்தொழுதும்எழு
துணரிஞாழல்நறும்போது நமசூழ்குழல்பெய்து * பின்
தணரில்ஆவிதளருமென அன்புதந்தானிடம்
புணரியோதம்பணிலம் மணியுந்துபுல்லாணியே. 5

எள்கிநெஞ்சே! நினைந்திங்கிருந்தென்? தொழுதும்எழு
வள்ளல்மாயன்மணிவண்ணன்எம்மான் மருவுமிடம்
கள்ளவிழும்மலர்க்காவியும் தூமடல்கைதையும்
புள்ளும்அள்ளற்பழனங்களும்சூழ்ந்த புல்லாணியே. 6

பாவிநெஞ்சே! தொழுதும்எழு போய்அவன்பாலமாய்
இரவுநாளும் இனிக்கண்துயிலாதிருந்துஎன்பயன்?
விரவிமுத்தம் நெடுவெண்மணல்மேற்கொண்டு * வெண்திரை
புரவியென்னப்புதம்செய்து வந்துந்துபுல்லாணியே. 7

அலமும்ஆழிப்படையும் உடையார்நமக்குஅன்பராய்
சலமதாகித்தகவொன்றிலர் நாம்தொழுதும்எழு
உலவுகால்நற்கருயோங்கு தண்பைம்பொழிலூடு * இசை
புலவுகானல் களிவண்டினம்பாடுபுல்லாணியே 8

ஓதிநாமங்குளித்துஉச்சிதன்னால் ஒளிமாமலர்
பாதம்நாளும்பணிவோம் நமக்கேநலமாதலின்
ஆதுதாரானெனிலும்தரும் அன்றியும்அன்பராய்
போதும்மாதே! தொழுதும் அவன்மன்னுபுல்லாணியே. 9

¶ இலங்குமுத்தும்பவளக்கொழுந்தும் எழில்தாமரை
புலங்கள்முற்றும்பொழில்சூழ்ந்து அழகாயபுல்லாணிமேல்
கலங்கலில்லாப்புகழான் கலியனொலி மாலை
வலங்கொள்தொண்டர்க்குஇடமாவது பாடில்வைகுந்தமே. 10

திருமங்கையாழ்வார் பாடியது:—பெரிய திருமொழி.

தரவு கோச்சகக்கலிப்பா (காம்போதிராகம் அடாதாளம்.)

¶ காவார்மடல்பெண்ணை அன்றிலரிகுரலும்
ஏவாயினூடியங்கும் எஃகின்கொடிதாலோ!
பூவார்மணம்கமழும் புல்லாணிகைதொழுதேன்
பாவாய்! இதுநமக்கு ஓர்பான்மையேயாகாதே. 1

முன்னம்குறளுருவாய் மூவடிமண்கொண்டளந்த
மன்னன்சரிதைக்கே மாலாகிப்பொன்பயந்தேன்
பொன்னங்கழிக்கானல் புள்ளினங்காள்! புல்லாணி
அன்னமாய் நூல்பயந்தாற்கு ஆங்கு இதனைச்செப்புமினே. 2

வவ்வித்துழாயதன்மேல் சென்றதனிநெஞ்சம்
செவ்வியறியாது நிற்குங்கொல்? நித்திலங்கள்
பவ்வத்திரையுலவு புல்லாணிகைதொழுதேன்
தெய்வச்சிலையாற்கு என்சிந்தைநோய்செப்புமினே. 3

பரிய இரணியனது ஆகம் அணியுகிரால்
அரியுருவாய்க்கீண்டான் அருள்தந்தவா! நமக்கு
பொருதிரைகள்போந்துலவு புல்லாணிகைதொழுதேன்
அரிமலர்க்கண்ணீர்ததும்ப அந்துகிலும்நில்லாவே. 4

வில்லால் இலங்கைமலங்கச் சரம்துரந்த
வல்லாளன்பின்போன நெஞ்சம்வருமளவும்
எல்லாரும்என்தன்னை ஏசிலும்பேசிடினும்
புல்லாணியெம்பெருமான் பொய்கேட்டிருந்தேனே. 5

சுழன்றிலங்குவெங்கதிரோன் தேரோடும்போய்மறைந்தான்
அழன்றுகொடிதாகி அஞ்சுடரில்தானடுமால்
செழுந்தடம்பூஞ்சோலைசூழ் புல்லாணிகைதொழுதேன்
இழந்திருந்தேன் என்தன் எழில்நிறமும்சங்குமே. 6

கனையாரிடிகுரலின் கார்மணியின் நாவாடல்
தினையேனும்நில்லாது தீயிற்கொடிதாலோ
புனையார்மணிமாடப் புல்லாணிகைதொழுதேன்
வினையேன்மேல்வேலையும்வெந்தழலேவீசுமே. 7

தூம்புடைக்கைவேழம் வெருவமருப்பொசித்த
பாம்பினணையான் அருள்தந்தவா! நமக்கு
பூஞ்செருந்திபொன்சொரியும் புல்லாணிகைதொழுதேன்
தேம்பலிளம்பிறையும் என்தனக்குஓர்வெந்தழலே 8

வேதமும் வேள்வியும் விண்ணும்இருசுடரும்
ஆதியுமானான் அருள்தந்தவா ! நமக்கு
போதலரும்புன்னைசூழ் புல்லாணிகைதொழுதேன்
ஓதமும்நாளும் உறங்காதிருந்தேனே. 9

ஸ்ரீ பொன்னலரும் புன்னைசூள் புல்லாணியம்மானை
மின்னிடையார்வேட்கைநோய்கூர இருந்ததனை
கல்நவிலும் திண்தோள் கலியனொலிவல்லார்
மன்னவராய்மண்ணாண்டு † வானாடுமுன்னுவரே. 10

திருவாசகப்பாடல்கள்.

மாணிக்கவாசகஸ்வாமிகள் உத்தரகோசமங்கையிலருளிச் செய்தது.

கட்டளைக்கலித்துறை.

கடையவ னேனைக் கருணையி னாற்கலந் தாண்டு கொண்ட
விடையவ னேவிட்டிடுதிகண் டாய்விறல் வேங்கையின்றோ
லுடையவ னேமன்னு முத்தரகோசமங்கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேனெம்பி ரானென்னைத் தாங்கிக்கொள்ளே. 1

கொள்ளேர் பிளவக லாத்தடங் கொங்கையர் கொவ்வைச் செவ்வாய்
விள்ளே னெனினும் விடுதிகண் டாய்நின் விழுத்தொழும்பி
னுள்ளேன் புறமல்லே னுத்தரகோசமங் கைக்கரசே
கள்ளே னொழியவுங் கண்டுகொண் டாண்டதெக் காரணமே. 2

காருறு கண்ணிய ளைம்புல னாற்றங் கரைமரமாய்
வேருறு வேனை விடுதிகண் டாய்விளங் குந்திருவா
ரூருறைவாய்மன்னு முத்தரகோசமங்கைக்கரசே
வாருறு பூண்முலையாள் பங்கவென்னை வளர்ப்பவனே. 3

வளர்கின்ற நின்கரு ணைக்கையில் வாங்கவு நீங்கி யிப்பான்
மிளிர்கின்ற வென்னை விடுதிகண் டாய் வெண்மதிக் கொழுந்தொன்
றொளிர்கின்ற நீண்முடி யுத்தரகோசமங் கைக்கரசே
தெளிகின்ற பொன்னுமின்னும்மன்ன தோற்றச் செழுஞ்சுடரே. 4

செழிகின்ற தீப்புகு விட்டிலிற் சின்மொழி யாரிற்பன்னாள்
விழுகின்ற வென்னை விடுதிகண் டாய் வெறிவாயறுகா
லுழுகின்ற பூமுடி யுத்தர கோசமங் கைக்கரசே
வழிநின்று நின்னரு ளாரமு தூட்ட மறுத்தனனே. 5

மறுத்தனன் யானுன் னருளறி யாமையி லென்மணியே
வெறுத்தெனை நீவிட்டிடுதிகண் டாய்வினையின்றொகுதி

யொறுத்தெனை யாண்டுகொ ளுத்தர கோசமங் கைக்கரசே
பொறுப்பரன் றேபெரியோர் சிறுநாய்கடம் பொய்யினையே. 6

பொய்யவ னேனைப் பொருளென வாண்டொன்று பொத்திக்கொண்ட
மெய்யவ னேவிட் டிடுதிகண் டாய்விட முண்மிடற்று
மையவ னேமன்னு முத்தரகோசமங் கைக்கரசே
செய்யவனேசிவ னேசிறியேன் பவந் தீர்ப்பவனே. 7

தீர்க்கின்ற வாறென் பிழையைநின் சீரு ளென்கொலென்று
வேர்க்கின்ற வென்னை விடுதிகண்டாய் விரவார்வெருவ
வார்க்கின்ற தார்விடை யுத்தரகோசமங்கைக் கரசே
யீர்க்கின்ற வஞ்சொடச் சம்வினையேனை யிருதலையே. 8

இருதலைக் கொள்ளியி னுள்ளெறும் பொத்து நினைப்பிரிந்த
விரிதலை யேனை விடுதிகண் டாய்வியன் மூவுலகுக்
கொருதலை வாமன்னு முத்தர கோசமங் கைக்கரசே
பொருதலை மூவிலை வேல்வல னேந்திப் பொலிபவனே. 9

பொலிகின்ற நின்றாள் புகுதப்பெற் றாக்கையைப் போக்கப்பெற்று
மெலிகின்ற வென்னை விடுதி கண்டாயளி தேர்விளரி
யொலிநின்ற பூம்பொழி லுத்தரகோசமங் கைக்கரசே
வலிநின்ற திண்சிலையா லெரித்தாய்புர மாறுபட்டே. 10

மாறுபட் டஞ்சென்னை வஞ்சிப்பயானுன் மணிமலர்த்தாள்
வேறுபட் டேனை விடுதிகண் டாய்வினை யேன்மனத்தே
யூறுபட் டேமன்னு முத்தரகோச மங்கைக்கரசே
நீறுபட் டேயொளி காட்டும்பொன் மேனிநெடுந் தகையே. 11

நெடுந்தகை நீயென்னை யாட்கொள்ள யானைம்புலன்கள் கொண்டு
விடுந்தகை யேனை விடுதிகண்டாய் விரவார்வெருவ
வடுந்தகை வேல்வல்ல வுத்தரகோசமங் கைக்கரசே
கடுந்தகை யேனுண் ணுந்தெண்ணீ ரமுதப் பெருங் கடலே. 12

கடலினு ணாய்நக்கி யாங்குன் கருணைக் கடலினுள்ளம்
விடலரி யேனை விடுதிகண் டாய்விட லில்லடியா
ருடலில மேமன்னு முத்தர கோசமங் கைக்கரசே
மடலின்மட் டேமணி யேயமுதேயென்மது வெள்ளமே. 13

வெள்ளத்து ணாவற்றி யாங்குன் னருள்பெற்றுத் துன்பத்தினின்றும்
விள்ளக்கி லேனை விடுதிகண் டாய்விரும் பும்மடியா
ருள்ளத்துள் ளாய்மன்னு முத்தரகோசமங் கைக்கரசே
கள்ளத்து ளேற்கரு ளாய் களியாத களியெனக்கே. 14

களிவந்த சிந்தையொ டுன்கழல் கண்டுங் கலந்தருள
வெளிவந்தி லேனை விடுதிகண் டாய்மெய்ச்சுடருக்கெல்லா
மொளிவந்த பூங்கழ லுத்தரகோசமங் கைக்கரசே
யெளிவந்த வெந்தைபி ரானென்னையா ளுடையென் னப்பனே. 15

என்னையப் பாவஞ்சலென்பவ ரின்றிநின்றெய்த் தலைந்தேன்
மின்னையொப் பாய்விட் டிடுதிகண்டா யுவமிக்கின் மெய்யே
யுன்னையொப் பாய்மன்னுமுத் தரகோசமங் கைக்கரசே
யன்னையொப் பாயெனக்கத்தனொப் பாயென் னரும்பொருளே. 16

பொருளே தமியேன் புகலிட மேநின் புகழிகழ்வார்
வெருளே யெனைவிட் டிடுதிகண் டாய்மெய்ம்மை யார்விழுங்கு,
மருளே யணிபொழி லுத்தர கோசமங் கைக்கரசே
யிருளே வெளியே யிகபரமாகி யிருந்தவனே. 17

இருந்தென்னை யாண்டுகொள் விற்றுக்கொளொற்றிவை யென்னினல்லால்
விருந்தின னேனை விடுதிகண்டாய்மிக்க நஞ்சமுதா
வருந்தின னேமன்னு முத்தரகோசமங் கைக்கரசே
மருந்தின னேபிறவிப்பிணிப்பட்டு மடங்கினர்க்கே. 18

மடங்கவென்று வல்வினைக் காட்டைநின் மன்னருட் டீக்கொளுவும்
விடங்கவென் றன்னை விடுதிகண்டாயென் பிறவியைவே
ரொடுங்களைந் தாண்டுகொளுத்தர கோசமங் கைக்கரசே
கொடுங்கரிக் குன்றுரித் தஞ்சுவித் தாய்வஞ்சிக் கொம்பினையே. 19

கொம்பரில் லாக்கொடி போலல மந்தனன் கோமளமே
வெம்புகின் றேனை விடுதிகண் டாய்விண்ணர் நண்ணுகில்லா
வும்பருள் ளாய்மன்னு முத்தரகோசமங் கைக்கரசே
யம்பரமேநில னேயனல் காலொடப் பானவனே 20

ஆனைவெம் போரிற் குறுந்தூ றெனப்புல னாலலைப்புண்
டேனையெந் தாய்விட் டிடுதிகண் டாய்வினை யேன்மனத்துத்
தேனையும் பாலையுங் கன்னலையும் மமுதத்தையுமொத்
தூனையு மென்பினை யும்முருக்காநின்ற வொண்மையனே. 21

ஒண்மைய னேதிரு நீற்றையுத் தூளித் தொளிமிளிரும்
வெண்மைய னேவிட் டிடுதிகண்டாய்மெய் யடியவர்கட்
கண்மைய னேயென்றுஞ் சேயாய்பிறர்க்கறி தற்கரிதாம்
பெண்மையனே தொன்மையாண்மை யனேயலிப் பெற்றியனே. 22

பெற்றதுகொண்டு பிழையே பெருக்கிச் சுருக்குமன்பின்
வெற்றடி யேனை விடுதிகண் டாய்விடிலோ கெடுவேன்

மற்றடி யேன்றன்னைத் தாங்குந ரில்லையென் வாழ்முதலே,
யுற்றடி யேன்மிகத் தேறிநின்றே னெனக் குள்ளவனே. 23

உள்ளனவேநிற்க வில்லன செய்யுமை யற்றுழனி
வெள்ளன லேனை விடுதிகண் டாய்வியன் மாத்தடக்கைப்
பொள்ளனல் வேழத் துரியாய் புலனின்கட் போதலொட்டா
மெள்ளன வேமொய்க்கு நெய்க்குடந்தன்னை யெறும்பெனவே 24

எறும்பிடை நாங்கூ ழெனப்புல னாலரிப் புண்டலந்த
வெறுந்தமி யேனை விடுதிகண் டாய்வெய்ய கூற்றொடுங்க
வுறுங்கடிப் போதவை யேயுணர் வுற்றவ ரும்பரும்பர்
பெறும்பதமேயடி யார்பெயராத பெருமையனே. 25

பெருநீ ரறச்சிறு மீன்றுவண்டாங்கு நினைப்பிரிந்த
வெருநீர்மையேனை விடுதிகண்டாய் வியன் கங்கைபொங்கி
வருநீர் மடுவுண் மலைச்சிறு தோணிவடிவின் வெள்ளைக்
குருநீர் மதிபொதி யுஞ்சடைவானக் கொழுமணியே. 26

கொழுமணி யேர்நகை யார்கொங்கைக் குன்றிடைச் சென்றுகுன்றி
விழுமடி யேனை விடுதிகண்டாய்மெய்ம் முழுதுங்கம்பித்
தழுமடி யாரிடை யார்த்துவைத் தாட்கொண் டருளியென்னைக்
கழுமணி யேயின்னுங் காட்டுகண் டாய்நின் புலன்கழலே. 27

புலன்கடி கைப்பிக்க யானுந் திகைத்திங் கொர்பொய்ந் நெறிக்கே
விலங்குகின் றேனை விடுதிகண்டாய்விண் ணு மண் ணுமெல்லாங்
கலங்கமுந் நீர்நஞ்சமுதுசெய் தாய்கரு ணாகானே
துலங்கு கின்றேனடி யேனுடை யாயென் றொழுகுலமே. 28

குலங்களைந் தாய்களைந் தாயென்னைக் குற்றங் கொற்றச்சிலையாம்
விலங்கலெந் தாய்விட் டிடுதிகண் டாய்பொன்னின் மின்னுகொன்றை
யலங்கலந்தாமரை மேனியப் பாவொப்பி லாதவனே
மலங்களைந் தாற்சுழல் வன்றயி ரிற்பொரு மத்துறவே. 29

மத்துறு தண்டயி ரிற்புலன் றீக்கது வக்கலங்கி
வித்துறு வேனை விடுதிகண் டாய்வெண் டலைமிலைச்சிக்
கொத்துறு போதுமிலைந்து குடர்நெடு மாலைசுற்றித்
தத்துறு நீறுட னாச்செஞ் சாந்தணி சச்சையனே. 30

சச்சைய னேமிக்க தண்புனல் விண்கா நிலநெருப்பாம்
விச்சைய னேவிட் டிடுதிகண் டாய்வெளியாய் கரியாய்
பச்சைய னேசெய்ய மேனிய னேயொண் படவாவக்
கச்சைய னேகடந் தாய்தடந்தாள வடற்கரியே. 31

அடற்கரிபோலைம் புலன்களுக் கஞ்சி யழிந்தவென்னை
விடற்கரி யாய்விட் டிடுதிகண்டாய் விழுத்தொண்டர்க் கல்லாற்
றொடற்கரி யாய் சுடர் மாமணியேசுடு தீச்சுழலக்
கடற்கரி தாயெழு நஞ்சமுதாக்குங் கறைக்கண்டேனே. 32

கண்டது செய்து கருணைமட் டுப்பரு கிக்களித்து
மிண்டுகின் றேனை விடுதிகண் டாய்நின் விரைமலர்த்தாள்
பண்டுதந் தாற்போற் பணித்துப் பணிசெயக்கூவித் தென்னைக்
கொண்டே னெந்தாய்களையாய் களையாய குது குதுப்பே. 33

குதுகுதுப் பின்றிநின் றென்குறிப் பேசெய்துநின் குறிப்பில
விதுவிதுப் பேனை விடுதிகண் டாய்விரையார்ந் தினிய
மதுமதுப் போன்றென்னை வாழைப் பழத்தின் மனங்கனிவித்
தெதிர்வதெப்போதுபயில்விக் கயிலைப் பரம்பரனே. 34

பரம்பர னேநின் பழவடி யாரொடு மென்படிறு
விரும்பர னேவிட் டிடுதிகண் டாய்மென் முயற்கறையி
னரும்பர னேர்வைத் தணிந்தாய் பிறவியை வாயரவம்
பொரும்பெரு மான்வினையேன்மன மஞ்சிப் பொதும்புறவே. 35

பொதும்புறு தீப்போற் புகைந்தெரி யப்புலன் நீக்கதுவ
வெதும்புறு வேனை விடுதிகண் டாய்விரை யார்நறவந்
ததும்புமந் தாரத்திற்றாம் பயின்றுமந்தம் முரல்வண்
டதும்புங் கொழுந்தே னவிர்சடை வானத்தடலரைசே. 36

அரைசே யறியாச் சிறியேன் பிழைக்கஞ்ச லென்னினல்லால்
விரைசேர் முடியாய் விடுதிகண் டாய்வெண் ணகைக்கருங்கட்
டிரைசேர் மடந்தைமணந்த திருப்பொற் பதப்புயங்கா
வரைசேர்ந் தடர்ந்தென்ன வல்வினை தான்வந் தடர்வனவே. 37

அடற்புல னாற்பிரிந் தஞ்சி யஞ்சொனல் லாரவர்தம்
விடர்விட லேனை விடுதிகண்டாய்விரிந் தேயெரியுஞ்
சுடரனை யாய்சுடு காட்டரசே தொழும்பர்க்கமுதே
தொடர்வரி யாய்தமி யேன்றனி நீக்குந் தனித்துணையே. 38

தனித்துணை நீநிற்க யான்றருக் கித்தலை யானடந்த
வினைத்துணை யேனை விடுதிகண் டாய்வினை யேனுடைய
மனத்துணை யேயென்றன் வாழ் முதலே யெனக்கெய்ப்பில் வைப்பே
தினைத்துணை யேனும் பொறேன்றுய ராக்கையின் றிண்வலையே. 39

வலைத்தலை மானன்னநோக்கியர் நோக்கின் வலையிற்பட்டு
மிலைத்தலைந் தேனை விடுதிகண் டாய்வெண் மதியினொற்றைக்

கலைத்தலைவாய் கருணாகரனே கயிலாயமென்னு
மலைத்தலை வாமலை யாண்மணவாளவென் வாழ் முதலே. 40

முதலைச்செவ் வாச்சியர் வேட்கைவெந்நீரிற் கடிப்பமூழ்கி
விதலைச்செய் வேனை விடுதிகண் டாய்விடக்கூன் மிடைந்த
சிதலைச்செய்காயம் பொறேன் சிவனேமுறை யோமுறையோ
திதலைச்செய் பூண்முலை மங்கைபங் காவென் சிவகதியே. 41

கதியடி யேற்குன் கழறந் தருளவு மூன் கழியா
விதியடி யேனை விடுதிகண் டாய்வெண் டலைமுழையிற்
பதியுடை வாளாப் பார்த்திறை பைத்துச் சுருங்கவஞ்சி
மதிநெடு நீரிற் குளித்தொளிக் குஞ்சடை மன்னவனே. 42

மன்னவ னேயொன்று மாறறியாச்சிறியேன் மகிழ்ச்சி
மின்னவ னேவிட்டி டுதிகண் டாய்மிக்கவேத மெய்ந்நூல்
சொன்னவ னேசொற் கழிந்தவ னேகழி யாத்தொழும்பர்
முன்ன வனே பின்னுமானவனே யிம் முழுதையுமே. 43

முழுதயில் வேற்கண்ணியரென்னு மூரித் தழன்முழுகும்
விழுதனை யேனை விடுதிகண் டாய்நின்வெறி மலர்த்தா
டொழுதுசெல் வானத் தொழும்பரிற் கூட்டிடு சொற்றெம் பிரான்
பழுதுசெய்வேனை விடே லுடையா யுன்னைப் பாடுவனே. 44

பாடிற்றி லேன்பணி யேன்மணி நீயொளித் தாய்க்குப் பச்சூன்
வீடிற்றி லேனை விடுதிகண்டாய் வியந்தாங்கலறித்
தேடிற்றி லேன்சிவ னெவ்விடத்தானெவர் கண்டனரென்
றோடிற்றி லேன்கிடந் துள்ளுருகேனின் றுழைத்தனனே. 45

உழைதரு நோக்கியர் கொங்கைப் பலாப்பழத்தீயி னொப்பாய்
விழைதரு வேனை விடுதிகண் டாய்விடின்வேலை நஞ்சுண்
மழைதரு கண்டன் குணமிலிமானிடன் றேய்மதியன்
பழைதரு மாபர னென்றென் றறைவன் பழிப்பினையே. 46

பழிப்பினின் பாதப் பழந்தொழும்பெய்தி விழப்பழித்து
விழித்திருந் தேனை விடுதி கண்டாய் வெண்மணிப் பணிலங்
கொழித்துமந்தாரமந் தாகினிநுந் தும்பந் தப்பெருமை
தழிச்சிறை நீரிற் பிறைக்கலஞ் சேர்தரு தாரவனே 47

தாரகை போலுந் தலைத்தலை மாலைத் தழலாப்பூண்
வீரவென் றன்னை விடுதிகண் டாய்விடி லென்னை மிக்கா
ராரடி யானென்னி னுத்தர கோசமங்கைக் கரசின்
சீரடி யாரடி யானென்று நின்னைச்சிரிப்பிப்பனே. 48

சிரிப்பிப்பன் சீறும்பிழைப்பைத் தொழும்பையு மீசற் கென்று
விரிப்பிப்பனென்னை விடுதிகண் டாய்விடின் வெங்கரியி
னுரிப்பிச்சன் றோலுடைப் பிச்சனஞ் சூண்பிச்ச னூர்ச்சுடுகாட்
டெரிப்பிச்சனென்னையு மாளுடைப் பிச்சனென் றேசுவனே 49

ஏசினும் யானுன்னை யேத்தினு மென்பிழைக் கேகுழைந்து
வேசறு வேனை விடுதிகண் டாய்செம்பவள வெற்பிற்
றேசுடையா யென்னை யாளுடையாய் சிற்றுயிர்க் கிரங்கிக்
காய்சினவாலமுண் டாயமுதுண்ணக் கடையவனே. 50

ஓர் குறிப்பு.

இந்த ஸஞ்சிகையில் விஸ்தரித்துச் சொல்லியிருக்கிறபடி ஸ்ரீராமரால் ராமேசுவரத்தில் பிரதிஷ்டைசெய்து பூஜிக்கப்பட்ட லிங்கத்தை தன் வால்வலிமையால் பெயர்க்க முயன்ற அபசாரத்தினால் தனக்குஏற்பட்ட பாபத்தைப் போக்கிக்கொள்ள கருதி ஹனுமாரானவர் வைத்தீச்வரன் கோயிலுக்கு மேற்கில் 6 மைல்தூரத்திலுள்ள தலைஞாயர், கருப்பறியலூர், மேலக்காழி, ஆதித்யபுரம், பூதிகாவனம் எனப்பல பெயருள்ள கன்மகாசபுரத்தை அணுகி அங்குள்ள மூலலிங்கத்தைப் பூஜித்து அக்கோயிலின் ஈசானபாகத்தில் தான் ஒரு லிங்கத்தை ஸ்தாபித்தனரென்றும் இக்காரனம்பற்றி இக்கோயிலுக்கு "குருக்குக்கா" எனப் பெயர்வந்ததென்றும் மேற்படி கருப்பறியலூர் ஸ்தலபுராணததால் வெளிவருகிறது. அந்தஸ்தலத்தைப்பற்றி செல்லும்பொழுது இவ்விஷயத்தை விஸ்தரிப்போம்.

		ரூ.	அ.	ப.
விக்டோரியா மெய்கீர்த்தி	...	0	12	0
மாணிக்கவாசகர்	...	0	10	0
கமலபவனம்	...	0	10	0
காதலா கருணையா	...	0	14	0
பாதாளவாஸி	...	0	6	0
சந்திரகுப்தன்	...	0	8	0
மங்கம்மாள்	...	1	8	0
ஞானசுந்தரன்	...	0	12	0
கமலநாதன்	...	1	8	0
அமிர்த ஸஞ்சீவினி	...	1	2	0
மதுராம்பாள்	...	0	12	0
வஜ்ரலேகை	...	1	4	0
தயாபரஸுந்தரி	...	0	12	0
மீனலோசனி	...	0	6	0
தீனதயாளு	...	0	12	0
பாய்பரமானந்தன்	...	1	0	0
ஸோமசுந்தரன்	...	1	0	0
யமகாதகன்	...	0	8	0
அமரநாதன்	...	1	4	0
குணஸுந்தரன்	...	1	4	0
கோமளம் குமரியானது	...	0	12	0
குலசேகரன்	...	1	0	0
நாகபூஷணம்	...	0	12	0
பீமராவ்	...	0	10	0
விஷதாரி	...	1	4	0
தாரா	...	0	10	0
உபநிஷத் பஞ்சகம்	...	0	5	0
பாத்திரமறிந்து பிச்சையிடு	...	0	1	0
மகாத்மா காந்தி	...	0	1	0
ராஜராஜேச்வரி	...	1	8	0
கல்பலதா	...	1	4	0
கோமளா	...	0	12	0
சித்ரரேகை	...	1	8	0
மாயாவதி	...	0	8	0
விக்ரமோர்வசீயம்	...	0	8	0
ராஜபுத்ர வீரன்	...	0	8	0
அழகு சுந்தரி	...	0	8	0
உத்தரராமாயண கதைகள்	...	0	4	0
மரகதவல்லி	...	0	6	0
சத்ருஜித்	..	0	12	0
ஆஸ்திகோபாக்யானம்	...	0	5	0
சிறுத்தொண்டர்	...	0	8	0
ஸ்ரீமதி	...	0	2	0
வீரவல்லி	...	0	12	0
பாயிரவிருத்தி	...	1	0	0
மனோன்மணி	...	0	12	0

		ரூ.	அ.	ப
மனோன்மணி கதை	...	0	8	0
செல்வராஜன்	...	0	12	0
கமலசுந்தரி	...	0	4	0
சந்திரஹாஸன்	..	0	3	0
பவழக்கொடி	...	0	8	0
காயற்கண்ணி	...	0	12	0
ராஜாத்தி	...	0	12	0
சிறுமணிச்சுடர்	...	0	1	0
அர்ஜுன ஸங்யாஸி	...	0	12	0
கதாகதம்பம்	...	0	2	0
குசேல வெண்பா	...	0	8	0
பகீரதன்	...	0	1	0
பாலவிநோதினி	...	0	2	0
ஔவையார்	...	0	12	0
ஸாவித்திரி சரித்திரம்	...	0	4	0
ஜியார்ஜ்மன்னன் சரித்திரம்	...	0	1	6
வள்ளியம்மை சரித்திரம்	...	0	8	0
பாலகங்காதர திலகர்	..	0	4	0
திரிலோகமோஹனாங்கி	..	1	0	0
ஆர்ய சரித்திரம்	...	0	8	0
ராமனும் ஸீதையும்	...	0	1	6
ஜீவகன்	...	1	0	0
ஸுபோத பாரிஜாதம்	...	5	0	0
தனபாலன்	...	2	0	0
கற்பசுந்தரி	...	2	12	0
சுந்தர்சிங்	...	1	4	0
ஆயிரம் தலைவாங்கிய அபூர்வசிந்தாமணி		1	0	0
பாலசுந்தரம்	...	1	0	0
அம்பலவாணன்	...	1	4	0
ருக்மணி	...	1	0	0
சரோஜனீ	...	2	0	0
அஞ்சனாவதி	...	1	4	0
லலிதாதேவி	...	0	12	0
நீலோத்பலவிசாலாக்ஷி	...	1	8	0
ஜெயசாந்தகாந்தா	...	1	0	0
திருக்கழுக்குன்றத்துக்கொலை	...	1	8	0
கோஹினூர்	...	0	9	0
பவானந்தர்	...	0	8	0
ஞானானந்தன்	...	0	11	0
கோவிந்தன்	...	0	10	0
மதனசிங்கர்	...	1	4	0
மாணிக்கவல்லி	...	1	0	0
இரட்டைப்புலவர் சரிதம்	...	0	6	0
அண்டப்புளுகன்	...	0	8	0
மர்ம்மமுடி	...	0	12	0
ரதிமதனன்	...	0	12	0

மானேஜர்,

ஸ்ரீ வாணீ விலாஸ புத்தகசாலை,

ஸ்ரீரங்கம்.